இலவச இ

Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-28 | 13-09-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-208

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதை சர்வதேச சமூகம் கைவிட வேண்டும்!

## தமிழ் கார்டியன் வலியுறுத்து

*இலங்கை இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிலே தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்துவதை சர்வதேச சமூகம் கைவிட வேண்டும் என்று லண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் கார்டியன் பத்திரிகை வலியுறுத்தியுள்ளது. தமிழ் கார்டியன் ஆசிரியத் தலையங்கம் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளது.*

நோர்வே அடித்தளத்தில் உருவாக்கிய அமைதி முயற்சியை ஒட்டுமொத்தமாக சீர்குலைப்பதுதான் ஜே.வி.பி-மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் என்றும் அத்தலையங்கம் சாடியுள்ளது. சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் இணைந்து சிங்களப் பேரினவாதத்தை உயர்த்திப் பிடிக்கிறார். அதைப் போலவே ரணில் விக்கிரமசிங்கவும் தேசியக் கோட்பாடு குறித்து அதிகம் பேசத்தொடங்கியுள்ளார் என்று கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இனவாத அமைப்புக்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு

### ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி.யுடன் செய்துகொண்ட 12 நிபந்தனைகளுடனான உடன்படிக்கையை முழுமையாக ஏற்று சிங்கள பௌத்த இனவாத அமைப்புகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமது முழுமையான ஆதரவினையும், ஒத்துழைப்பையும் வழங்க தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக தேசிய ஒழுங்கமைப்பு ஒன்றியம் நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், ஒன்றியத்தில் இணைந்துள்ள பல சிங்கள இனவாத பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்களது ஒருமித்த ஆதரவை மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட 'சிந்தனை' அமைப்பின் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்லா,

சனாதிபதித் தேர்தல் தேசியவாதத்திற்கும், மேற்குலக வாதத்திற்கும் இடையே இடம்பெறும் போட்டியா

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிரான நீதிமன்றத்தடை நீடிப்பு

(கொழும்பு)

பொதுகட்டமைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் விதித்திருந்த இடைக்கால தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த இடைக்கால தடைஉத்தரவு எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதிவரை செல்லுபடியாகும் என பிரதமநீதியரசர் சரத் என் சில்வா நேற்று அறிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பை இரத்துச்செய்யவேண்டும் எனக்கோரி ஜே.வி.பி தாக்கல் செய்த மனுவின் விசாரணை நேற்று நடைபெற்ற போதே உயர்நீதிமன்றம் இடைக்கால தடையை நீடித்துள்ளது.

பொதுகட்டமைப்பை தடைசெய்யக்கோரி மொத்தமாக ஆறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் மூன்று மனுக்களுக்கு எதிராக பிரதிவாதிகளால் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் எஞ்சியுள்ள மனுக்களுக்கு எதிராகவும் ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்யுமாறு தெரிவித்த பிரதமநீதியரசர் நவம்பர் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் விசாரணைகள் நடைபெறுமென அறிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### -வவு. வில் சிறிலங்கா படையினர் தேடுதல்-

## ஈழநாதம் விற்பனையாளர் உட்பட நால்வர் படையினரால் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் நேற்று சிறிலங்காப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது ஈழநாதம் பத்திரிகை விற்பனையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் இரண்டு தேசிய அடையாள அட்டை வைத்திருந்தவர் என்றும் மற்ற இருவரும் தமது கடைக்கு பின்னால் இராணுவ சீருடையை ஒத்த துணி வகைகளை பதுக்கி வைத்திருந்தார்கள் என்றும் வவுனியா பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபயசிங்க பண்டா தெரிவித்தார். ஈழநாதம் பத்திரிகை விற்பனையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் கைது செய்யப்பட்ட 3 பொலிசாருக்கு விளக்க மறியல்




மன்னார் முசலிப்பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கடந்த ஒன்பதாம் திகதியன்று அனுமதியின்றி வந்த சிறிலங்கா பொலிஸ்.சப்இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் தமிழீழக் காவல்துறையினரால் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் குழுக்களுக்கிடையேயான மோதல்களை முடிவுக்கு கொண்டுவர புலிகள் நடவடிக்கை

தென்மராட்சிப்பகுதியில் இளைஞர்குழுக்களுக்கிடையே இடம்பெற்று வரும் தொடர்மோதல்களை முடிவுக்கு கொண்டுவர யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

தென்மராட்சி குடமியன், தவசிக்குளம் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையேயான மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் மோதலில் ஈடுபடும் தரப்பினரை அழைத்து கலந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பிற்கு முழுமையான அச்சுறுத்தல் ஏற்பட்ட பின்பே போராளிகள் வெளியேறினர்!

### யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட சரத்துக்கு அமைவாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் அரசியல் பணிபுரியும் போராளிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படாத நிலையிலும் பாதுகாப்பு என்பது அச்சுறுத்தல் என்ற முழுமையான கட்டத்தை அடைந்த நிலையில் தான் எமது தேசியத்தலைவரின் பணிப்பிற்கிணங்க அரசியல் போராளிகள் யாவரும் அரசகட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்துமுழுமையாக வெளியேறி எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்துள்ளோம் என யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று பளையிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை செயலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு நேற்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இதன் போது ஊடகவியலாளர்களின் கேள்

(12ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியா-இலங்கைக்கிடையே கடலடித் தொடர்பு முறை

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கடலடி தொடர்பு முறையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் இந்தியாவை சேர்ந்த வரையறுக்கப்பட்ட பாரத் சஞ்சார் நிறுவனமும் இதில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவின் தூத்துக்குடிக்கும் இலங்கையின் கல்கிஸ்ஸைக்கும். இடையில் கடலடி தொடர்பு முறையை செயற்படுத்தக்கூடியதாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

கிளி/155 ஆம் கட்டை A9 பாதைக்கு (வைலசிற்கு அருகில்) சமீபமாக 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு தொடர்புக்க A.S ஜெயந்தன், இல.77 விவேகானந்த நகர், கிளிநொச்சி.T.P 077-6424349

(6698)

### தவறிவிட்டது

இராமநாதபுரத்தில் வசிக்கும் கனகலிங்கம் இந்திராதேவி என்பரது வயல், வளவு,காணி உறுதியும் திருமணப்பதிவுக் கொப்பியும் மக்கள் வங்கிக்கும், மத்திய கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள். (6703)

### தவறிவிட்டது

கிஸ்ணமூர்த்தி அன்னபூரணம் என்பவரது தேசிய அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை என்பன 11.09.2005 அன்று முகமாலைக்கும், வட்டக்கச்சிக்கும் இடையில் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர் சன்மானம் வழங்கப்படும். (6704)

## தேவைப்பகுப்பாய்வு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கிராம ரீதியான தேவைப் பகுப்பாய்வினை கிளி/கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இராமநாதபுரம், சாந்தபுரம், பன்னங்கண்டி ஆகிய கிராமங்களில் கடந்த சில நாட்களாக இத்தேவைப் பகுப்பாய்வு இடம்பெற்றது. ஏனைய கிராமங்களிலும் தொடர்ந்து தேவைப் பகுப்பாய்வு இடம் பெறவுள்ளது.(12)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/பாலிநகர் மகாவித்தியாலய தரம் 7 மாணவன் செல்வன் தங்கவேல் நிசப்தன் அவர்கள் 11.09.2005 மாகாண மட்டத்தில் நடைபெற்ற கணிதப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித்தந்துள்ளார். இவரை பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்

பழைய மாணவர் சங்கம்,
மு/ பாலிநகர் ம.வி,
பாலிநகர்.

(6706)

## பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளம்

### பாரவூர்தி ஏலவிற்பனை

நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான புத்தகப்பதிவுமுடைய பின்வரும் விபரப்படியான பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை மூலம் 29.09.2005 ஆம் திகதி காலை பத்து மணிக்கு பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணிமனையில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250/-வும், மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா 10000/- முமாக இவ்வைப்புக்களை ஏல விற்பனைக்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாகவே தலைமைப் பணிமனையில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று பதிவு செய்து கேள்வியில் பங்குகொள்ள முடியும். வாகனத்தை 13.09.2005 இல் இருந்து 28.09.2005 ஆம் திகதி வரை கடமை நேரங்களில் பாலிநகர் வவுனிக்குளத்தில் அமைந்துள்ள சங்க தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் இரண்டு நாட்களுக்குள் முழுப் பணத்தையும் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வாகன விபரம்:

லொறி அசோக் லேடன் 43/8263
இயந்திர இலக்கம் CWE 178304
அடிச்சட்ட இலக்கம் LALG 01633

தலைவர்,
பனங்காமம் பற்று பல
நோ.கூ.சங்கம்,
பாலிநகர்,
வவுனிக்குளம்.

(சி/12815)

# இனவாதத்தின் அடிப்படையில் வங்கிகளுக்கான நியமனங்கள்

(திருகோணமலை)

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள கிளைகளுக்கு வழங்கப்பட்ட நியமனங்கள் அப்பட்டமான இனவாதத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன.

இந் நியமனங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு சனாதிபதி உத்தரவிட வேண்டு என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரியுள்ளது.

அண்மையில் இலங்கை வங்கி 600 பேருக்கு புதிய நியமனங்களை வழங்கியுள்ளன. இவற்றில் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள கிளைகளுக்கு 45 பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் இரண்டு பேரே தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த 45 பேரில் திருகோணமலை மாவட்டத்துக்கு பத்துப் பேர் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் எவருமே திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல.

இதேபோன்று மக்கள் வங்கியும் புதிதாக 750 பேருக்கு நியமனங்களை வழங்கியுள்ளது. இவர்களில் 20 பேர் திருமலை மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களில் இரண்டு பேர் மட்டுமே தமிழ் பேசும் இனத்தவர்கள் ஏனையோர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் என்று பேரவை தனது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந் நியமனங்கள் யாவும் அரசியல் பின்னணியில் இனவாதக் கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நியமனங்களில் இன விகிதாசாரம் பேணப்படவில்லை. திருமலை மாவட்டத்தில் முற்று முழுதாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்களை வழங்குவது, திருமலையில் படித்த தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளை வேதனைக்குட்படுத்தியுள்ளது. புதிதாக வழங்கப்பட்ட நியமனங்கள் யாவும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் இனவிகிதாசார அடிப்படையில் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பேரவை மகஜரில் கோரி யுள்ளது.


(25)

## பொதுமக்கள் பார்வைக்கு
## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

14.09.2005 ஆம் நாள் நடைபெறும் தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தொடங்கும் அனைத்து பேருந்துப் பணிகளும் அன்றைய நாள் நடைபெறாது என்பதனை அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
முல்லைத்தீவு .

(சி/12813)



# அமெரிக்க மக்களின் தேசபக்தியை தீவிரவாதிகளால் குலைத்துவிட முடியாது

(வோஷிங்டன்)

**தீவிரவாதிகளால் அமெரிக்க மக்களின் தேசபக்தியை சீர்குலைத்து விட முடியாது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.**



ஜோர்ஜ் புஷ்

நான்கு ஆண்டுகளுக்கு முன் செப்ரெம்பர்11 இல் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் வர்த்த மைய கட்டடங்களை தீவிர வாதிகள் தகர்த்ததை நினைவு கூரும் வகையில் சனிக்கிழமை நடந்த நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு பேசினார்.

தன்னலமற்ற தைரியமான, மனிதாபிமான செயல்களால் இது போன்ற அழிவுகளை எதிர்கொண்டு முன்னேறும் உத்வேகம் அமெரிக்க மக்களுக்கு இருக்கிறது.

அதை தீவிரவாதிகளால் அழித்துவிட முடியாது என்றார் அவர் கற்றினா சூறாவளியால் ஏற்பட்ட பேரிழப்பு களையும் குறிப்பிட்டார். இந்த முறை இயற்கையின் சீற்றத்தால் பேரழிவு நிகழ்ந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் செப்ரெம்பர் 11 இல் அப்பாவி மக்களைக் கொன்று குவித்து தீவிர வாதிகள் ஆனந்தம் அடைந்த செயலை அமெரிக்க மக்கள் மறக்க மாட்டார்கள் என்றும் அவர் குறிப் பிட்டார்.

## பாக்தாத் விமான நிலையம் மீண்டும் செயற்படத் தொடங்கியது

(பாக்தாத்)

பராமரிப்பு கட்டணத்தைச் செலுத்தாத கார ணத்தால் மூடப்பட்டிருந்த பாக்தாத் விமான நிலையம் நேற்று முன்தினம் மீண்டும் செயற்பட தொடங்கியது.

ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள விமான நிலைய பாதுகாப்பை பிரிட்டனைச் சேர்ந்த குளோபல் நிறுவனம் கவனித்து வருகிறது. அதற்கு செலுத்தவேண்டிய பராமரிப்பு கட்ட ணத்தை ஈராக் அரசு ஆறு மாதங்களாக செலுத்தவில்லை. எனவே, கடந்த வெள்ளிக் கிழமை விமான நிலையம் மூடப்பட்டது. எந்த விமானமும் பறந்து செல்லவோ, தரையிறங் கவோ அனுமதிக்கப்படவில்லை.

நிலுவைத் தொகையில் பாதியளவு செலுத்து வதாக ஈராக் அரசு உறுதியளித்ததைத் தொடர்ந்து விமான நிலையம் மீண்டும் செயற் பட குளோபல் நிறுவனம் அனுமதியளித்தது. இதைத் தொடர்ந்து விமான நிலையம் செயற்படத்தொடங்கியது.



38 வருடங்களின் பின்னர் காஸாவின் எகிப்து எல்லையிலிருந்து இஸ்ரேலிய துருப்பினர் வெளியேறத் தயாரான நிலையில் அவர்களின் தேசியக் கொடி இறக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# அவுஸ், அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவோம் அல்-ஹைதா தீவிரவாத அமைப்பு மிரட்டல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரங்களில் குண்டுவீச்சு தாக்குதல் நடத்துவோம் என்று அல் -ஹைதா தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள் ளது.

அல்- ஹைதா அமைப்பின் அமெரிக்க உறுப்பினர் விடுத்த இந்த மிரட்டல் ஏ.பி.சி தொலைக்காட்சியில் ஞாயிற்றுக்கிழமை யன்று 11 நிமிடங்கள் ஒளிபரப்பானது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இதே. செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க்கில் உலக வர்த்தக மைய கட்டடங்கள் தகர்க் கப்பட்டன. இதன் ஆண்டு தினத்தை முன்னிட்டு அல் ஹைதா மீண்டும் இத்தகைய மிரட்டலை விடுத்துள்ளது.

மிரட்டல் செய்தி அடங்கிய வீடியோ ஒளிநாடாவை தொலைக்காட்சிக்கு கொடுத்தவர் பெயர் ஆடம் கடான் என்று தெரிய வந்துள்ளது. இவர் அமெரிக்கர். கலிபோர்னியாவைச் சேர்ந்தவர்.

இஸ்லாம் மதத்தைத் தழுவிய பின் அல்-ஹைதா தலைவர் ஓசாமா பின் லேடனின் தீவிர ஆதரவாளராக மாறி விட்டவர் என்று கூறப்படுகின்றது. கடந்த ஆண்டும் இதே போன்ற மிரட்டல் வீடியோ ஒளி நாடாவை கடான் அனுப்பியிருந்தார் என்று அமெரிக்க உளவுத் தகவல்கள் தெரிவித்தன.

# ஹமாஸ் அமைப்பை பலஸ்தீனம் ஒடுக்க வேண்டும் இஸ்ரேலின் கோரிக்கையை நிராகரித்தார் அப்பாஸ்

(வோஷிங்டன்)

பலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் போன்ற தீவிரவாத அமைப் புக்களை ஒடுக்கும் படி பலஸ்தீன நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன். ஆனால் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார் பாலஸ்தீன தலைவர் முகமுத் அப்பாஸ்.

காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் இராணுவம் வெளியேறிய நிலையில் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் இவ்விருவரின் பேட்டி வெளியாகியது.

காஸா பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறுவது மிக முக்கியமானதாகும். எனினும் அமைதித் தீர்வுக்கான திட்டத்தை அமுல்படுத்த புதிய நடவடிக்கைகள் எடுப்பது இப்போது பலன் தராது.

2002இல் உருவான இந்த சர்வதேச அமைதித் திட்டத்தின் படி பல்வேறு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் அதன் பின் பலஸ்தீன நாடு உருவாகும்.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முன்னர் முதலில் செய்ய வேண்டியது பயங்கரவாத விரோதச் செயல்களை ஒடுக்குவ தாகும். பயங்கரவாத அமைப்புக்களை பலஸ்தீன நிர்வாகம் முதலில் ஒழித்து விட வேண்டும். அவர்கள் வைத்துள்ள ஆயு தங்களை பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

பாதுகாப்புத் துறையில் புதிய சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும். இதையெல்லாம் எடுத்தால் அமைதித் திட்டம் தொடர்பாக பேச்சு நடத்தலாம் என்றார் ஷெரோன்.

ஹமாஸ் மீதோ அல்லது பிற அமைப்புக்கள் மீதோ நடவடிக்கை எடுக்க நாங்கள்தயாராக இல்லை. காஸா பகுதியில் இந்த அமைப்புக்கள் பலத்துடன் உள்ளன. தற்போதைய நிலை யில் அந்த அமைப்புக்களுடன் மோத தயாராக இல்லை உள் நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை என்றார் அப்பாஸ்.



நியூஓர்லியன்ஸ் சூறாவளியால் இடம் பெயர்ந்து அகதி முகாமில் இருக்கும் பெண் ஒருவர் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளார்.

# ஜப்பானிய பொதுத் தேர்தல் பிரதமர் பதவியை தக்க வைத்தார் கொய்சுமி

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்த லில் பிரதமர் யுனிசுரோகொய்சுமின் லிபரல் சனநாயக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது.

480 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் கீழ் சபையில் லிபரல் சனநாயகக் கட்சிக்கு 296 ஆசனங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

லிபரல் சனநாயகக் கட்சியின் தோழமைக் கட்சியான புதிய கொமைடோ கட்சிக்கு 31 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் பாராளுமன்றத்தின் கீழ் சபையில் பிரதமர் கொய்சுமியின் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கும் எனக் கூறப்படுகின் றது. இந்த வெற்றியானது பாராளுமன்றத்தின் கீழ் சபையில் அமைக்கப்படும் செயற் குழுக்கள் அனைத்திலும் லிபரல் சன நாயக் கட்சி ஆதிக்கம்செலுத்துவதற்கு வழி கோலியுள்ளது. இதன் மூலம் பாராளுமன்றத்தின் மேல் சபையிலும் அதன் ஆதிக்கம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை எதிர்க்கட்சியான சனநாயகக் கட்சி படு தோல்வியைத் தழுவியதன் காரணமாக அதன் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.



காஸா முனையிலிருந்து இஸ்ரேலியத் துருப்பினர் வெளி யேற்றப்பட்டதையடுத்து தமது கொடிகளுடன் மகிழ்ச்சி ஆர வாரத்தில் ஈடுபட்டுள்ள பலஸ்தீன இளைஞர்கள்.

# சதாமுக்கு மரண தண்டனை; குவைத் அரசு கோரிக்கை

எண்ணெய் வள நாடான குவைத்தில் ஊடுருவி அங்கு விளைவித்த குற்றங்களுக்காக ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனிற்கும் அவரது உதவியாளர்களுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டுமென்று குவைத் கூறியுள்ளது.

1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற வளைகுடாப் போரில் குவைத் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் குவைத் ஏழு மாதங்கள் ஈராக்கின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

சதாம் ஹுசைன் மேல் குற்றம் சுமத்துவதற்கு குவைத் குற்றப்பத்திரிகை தயார் செய்து விட்டதாக சட்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸில் ஒக்.18 ஆம் திகதிக்குள் தண்ணீர் வடிந்துவிடும்

**-பொறியியலாளர்கள் தகவல்**

(வோஷிங்டன்)

கற்றினா சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூஓர்லியன்ஸ் நகரில் தற்போது தண்ணீர் வடிந்து வருவதாக தெரிவிக்கப்படு கிறது. ஒக்ரோபர் 18ஆம் திகதி அனைத்து தண்ணீரும் வெளி யேற்றப்படும் என்று பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில்கடந்த மாதம் 29ஆம் திகதி கற்றினா சூறாவளி வீசிய போது பேய் மழை பெய்தது. 230.கி.மீ., வேகத்தில் சூறாவளி வீசியதில் மிசிசிப்பி,லூசியானா, அலபாமா மாகாணங்கள் பாதிக்கப்பட்டன. லூசியானாவில்மிக மோசமாக பாதிக்கப்பட்ட நியூஓர்லியன்ஸ் நகரின் 80 சதவீத பகுதி தண்ணீரில் மூழ்கிவிட்டது.மொத்த தண்ணீரையும் வெளியேற்ற 80 நாட்களாகும் என பொறியியலாளர் தெரிவித்தனர். தற்போது தண்ணீர் வேகமாக வடிந்து வருவதால் ஒக்ரோபர்18ஆம் திக திக்குள் பல அடி உயரம்தேங்கிநிற்கும் தண்ணீர் வெளி யேற்றப்படும் என்று பொறியலாளர்கள் தெரிவித்தனர்.



கடந்த எட்டாம் திகதி சுமாத்தராவில் மெதானில் பயணத்தை ஆரம்பித்த சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளான மண்டோலா விமான சேவையின் போயிங் 737 -250 ரக விமானத்தின் சிதைவுகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தேடுதல் பணியாளர்கள் சம்ப வத்தில் 102 பயணிகள் பலியாகினர்.

# எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்க கூட்டுறவாளர்கள் வீட்டுத்தரிசிப்பு

(மல்லாவி)

வவுனியாப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லை. மாவட்ட பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் கூட்டுறவாளர்களின் செயலணிக்குழுக்களின் வீட்டுத்தரிசிப்பு நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இவ் வீட்டுத்தரிசிப்பு நிகழ்வானது வவுனியா தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மாலதி விளையாட்டு மைதானத்தில் நாளை பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாபெரும் எழுச்சி விழாவுக்கு வலுச்சேர்க்கும் முகமாக கிராமங்கள் தோறும் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் துணுக்காய் பிரதேசத்தின் கொக்காவில், தேறாங்கண்டல், யோகபுரம் பழைய முறிகண்டி ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் பகுதிகளில். கிராம மக்களுக்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர் அத்துடன் பாண்டியன்குளம் பிரதேசத்தின் நட்டாங்கண்டல் பாலி நகர் பகுதிகளிலும் விழிப்புணர்வுகள் அந்தந்தப் பிரதேசகூட்டுறவாளர் மூலம் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கிராமங்கள் தோறும் எழுச்சிப் பிரகடனத்திற்கான பதாதைகள் கட்டப்பட்டு பிரசுரங்கள்ஒட்டப்பட்டு கூட்டுறவாளர்கள் கருத்துக்கள் வழங்கி வருகின்றனர். இதில் பெருமளவான கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (24).



கண்டாவளைப் பிரதேச செயலர்பிரிவிலுள்ளதருமபுரம் கிராமத்திலுள்ள ஆலடிக்குளம்தண்ணீர் வற்றிய நிலையில் குளத்திலுள் கிணறு (பூவல்)தோண்டி மக்கள் நீரைப் பெறுவதைக் காண்க.

(படம்: -வதனன்)

# தியாகி திலீபன் நினைவாக விசேட வைத்திய சேவை

நயினாமடு தியாக திபம் திலீபன் மருத்துவ சேவையில் நாளை புதன்கிழமை விசேட சிகிச்சைகள் இடம்பெற ஏற்பாடகியுள்ளது.

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக விசேட வைத்தியர்கள் வருகை தந்து இவ் வைத்திய சேவையை நடாத்துகின்றனர். இதில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சிறப்பாக இயங்கும் முன்பள்ளிகளுக்கு சத்துணவுக்கான நிதியுதவி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக இயங்கும் ஐந்து முன்பள்ளிகளுக்கு சத்துணவு வழங்குவதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு கடந்த ஆறாம் திகதி மன்னார் சர்வோதய இயக்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரானிடிமெல்குரூஸ் கலந்துகொண்டார்.

பேசாலை முருகன்கோவிலடி, மடுக்கரை, வங்காலை, கோட்டவெளி,பள்ளிமுனை போன்ற இடங்கலிலுள்ள முன்பள்ளிகளுக்கு இந்த நிதியுதவிவழங்கப்பட்டது. (18)

# திருமலை பொருண்மிய மதியுரையகத்தின் ஆண்டு நிறைவு விழாவில் போட்டிகள்

-ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி முதலிடம்

**திருகோணமலை மாவட்டபொருண்மிய மதியுரையகத்தின் (திருமலை ரெக்)முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட கணினி அறிவுப் புதிர்போட்டியில் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி 18 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை சுவீகரித்தது.**

திருகோணமலை சென்மேரிஸ் பெண்கள் கல்லூரி 12 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை சுவீகரித்தது. போட்டியில் பங்குபற்றிய மூதூர் அல்ஹிலால் மகா வித்தியாலயம், தம்பலகமம் ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலயம் ஆகியன தலா பத்து புள்ளிகளைப் பெற்றன.

திருகோணமலை ரெக் நிறுவனத்தின் ஓராண்டு நிறைவை ஒட்டி கணினி அறிவுப்புதிர்போட்டியும் விருது வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மாலை திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் திருகோணமலை ரெக் நிர்வாகத்தினால் நடத்தப்பட்டது. பிரதமஅதிதியாக வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம், சிறப்பு அதிதியாக வவுனியா வடக்குக் கல்விப்பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் பங்குபற்றினர்.திருகோணமலை ரெக் நிறுவனத்தின் தலைவர் ரி.பேரின்பநாதன் தலைமை வகித்தார். லண்டன் ரி/ஆர்.ரெக்நிறுவனத்தின் அனுசரணையுடன் சிற்றி கில்ட்ஸ் தர சான்றிதழுக்குரிய கணினிப் பயிற்சிநெறியை நிறைவு செய்த 42 பேருக்கு நிகழ்வின் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கணினி பயிற்சி பெறுவதற்கு ஊக்குவிப்பாக பன்னிரண்டு மாணவருக்கு மாதம் தோறும் 500ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகள் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. இதனைவிட கணினித்துறையில் திறமை காட்டிய மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. திருகோணமலை ரெக் நிறுவனம் திருகோணமலை மாவட்டத்தில் கிராமப்புற மாணவர் மத்தியில் கணினி அறிவைப் பெருக்குவதில் காட்டும் அக்கறையை மாகாண கல்விச் செயலாளர் தியாகலிங்கம் தனது உரையில் பாராட்டினார். இந்நிகழ்வில் ரெக் அமைப்பின் கிளிநொச்சி நடுவப்பணியகம். லண்டன் ரெக்.கனடா ரெக் ஆகிய அமைப்புகளிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பங்குபற்றினர். (25)

# சூழல்பாதுகாப்பை கருத்தில் கொண்டு இரு இடங்களில் மணல் அகழ்விற்கு அனுமதி

*–கரைச்சிப் பிரதேச சபை அறிவிப்பு*

(விசுவமடு)

சூழல் பாதுகாப்புக் கருதி கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு பிரதேசங்களில் மணல் மண் அகழ்வு செய்வதற்கான அனுமதியை கரைச்சிப் பிரதேச சபை வழங்கி வருகின்றது. ஏனைய இடங்களில் மணல் மண் அகழ்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கு கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாற்றுப் பகுதியிலும் கிளிநொச்சி மேற்குப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பேராற்றுப் பகுதியிலும் மணல்மண் அகழ்வு செய்வதற்கு அனுமதியினை கரைச்சிப் பிரதேச சபையினர் வழங்கி வருகின்றனர். மணல்மண்தேவைப்படுபவர்கள் கரைச்சிப் பிரதேச சபையுடன் அல்லது உப பணிமனையுடன் தொடர்பு கொண்டு தமக்கான உரிமப் பத்திரங்களைச் சமர்ப்பித்து மணல் அகழ்விற்கான அனுமதியை பெற்று மணலைஅகழ்வு செய்ய வேண்டுமென கரைச்சிப் பிரதேச செயலாளர் வெ.குலேந்திரன் தெரிவித்துள்ளார். மக்கள் அனைவரும் இந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து எமது சூழலைப்பாதுகாக்க உதவுமாறு பிரதேசசெயலாளர்மக்களுக்கு வேண்டுகோளை விடுத்துள்ளார். (46)

# பால்நிலை சமத்துவம்; பயிற்சிப்பட்டறை

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் பால்நிலை சமத்துவம் தொடர்பான 'பயிற்சிப்பட்டறை கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மகளிர் அபிவிருத்தி ஒன்றிய இணைப்பாளர் ஜெசி அரியரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியில் 49 இற்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் கல்ந்துகொண்டனர்.

இவர்களுக்குரிய விரிவுரைகளை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளரும், மகளிர் அபிவிருத்தி தேசிய ஆலோசகருமான திருமதி கௌரி பழனியப்பன் ஆற்றினார். (18)

# விவசாயிகளுக்கு பழமர நாற்று ஒட்டுமுறை பயிற்சி வழங்கல்

(விசுவமடு)

வட்டக்கச்சிப் பிரதேச விவசாயிகளுக்கான பழமர நாற்றுக்கள் ஒட்டுமுறை பயிற்சி விவசாய திணைக் கழகத்தினரால் வழங்கப்பட்டது. வட்டக்கச்சி, சம்புக்குளம், கிராமத்தில் சம்புக்குளம் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் விவசாய திணைக்கள விவசாய போதனாசிரியர் செல்வி மாலினி தலைமையில் கடந்தவாரம் பயிற்சி நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை விவசாயத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட பாடவிதான உத்தியோகஸ்தர் சௌந்தரராசன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டக்கச்சிப்பிரதேச இணைப்பாளர் லொயிட் ஆகியோர் வழங்கினார்கள்.

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இ.பொன்னம்பலம் ஒட்டு முறைப் பயிற்சியை வழங்கினார். பயிற்சியில் 25 இற்கு மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து பயிற்சி பெற்றனர். இதற்கான ஒழுங்கமைப்பினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டக்கச்சி இணைப்பாளர் மேற்கொண்டார். (46)

# கமக்கார அமைப்புத் தெரிவு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கமக்காரர் அமைப்பு தெரிவுகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வித்தியாபுர கிராமத்திற்குரிய கமக்கார அமைப்பு தெரிவு நடைபெற்றது. இத்தெரிவுகமக்கார அமைப்புத்தலைவர் வை.சிவஞானலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கமக்கார அமைப்பு தொடர்பான கருத்துக்களை ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் த.பொ.மே. நிறுவன ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வீ.ஆனந்தனும் வழங்கினர். (05)

# 83ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் கிளி.மாவட்ட கூ.சங்கங்களால் சிறப்பிப்பு

(பூநகரி)

கிளி.மாவட்டகூட்டுறவுச் சங்கங்களால் 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா பூநகரி வாடியடி மைதானத்தில் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் கடந்த சனிக்கிழமைபிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமானது.

முதல்நிகழ்வாக ஈகச்சுடரை பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதன் ஏற்றிவைக்க தேசியக் கொடியை தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றினார். இதனைத் தொடர்ந்து கூட்டுறவுக் கொடிகள் நிறுவனங்களின் தலைவர்களால் ஏற்றிவைக்கப்பட்டது.

தொடர்ந்து விழாச் சுடரினை அரசஅதிபர் தி.இராசநாயகம், யாழ். பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் த.கந்தசாமி, மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் கேதீஸ்வரன்,தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் இசையமுதன் ஆகியோர் ஏற்றினர். இதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. வரவேற்புரையை பூநகரி ப.நோ.கூ.சங்க கௌரவ நெறியாளர்குழு உறுப்பினர் த.தயாரூபன் ஆற்றினார். வரவேற்புரையைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்று உரையரங்கு இடம்பெற்றது. பின்னர் அரசாங்க அதிபரால் பூ.ப. நோ. கூ.கிராமியவங்கிபுதியகட்டடம் திறந்துவைக்கப்பட்டது. உரையரங்கில்சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செல்வராசா, பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட கிராமிய வங்கியின் சமாசத் தலைவர் குகராசா, வடமாகாண பனைதென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத் தலைவர் ; கிளிநொச்சி மாவட்டகூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கந்தசாமி, பூநகரி உதவி அரசாங்க அதிபர்பா.சிறீஸ்கந்தகுமார்,வணபிதா ஆம்ஸ்ரோங், சிக்கன கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் ந.செல்வராசா, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர் தி.இராசநாயகம் உரை இடம்பெற்றது.

பின்னர் கூட்டுறவு தினவிழா மலர் வெளியீடு இடம்பெற்றது. அரசு அதிபர் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியத் தலைவர் நா. நடராசா பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை பூநகரி ம.வி. அதிபர் பொன். தில்லைநாதன் ஆற்றினார். பின்னர் ஆண்.பெண் மரதன் ஓட்டம், ஆண். பெண், சைக்கிள் ஓட்டப்போட்டி, படகு ஓட்டப்போட்டி, கால்பந்துப் போட்டி, மாணவர்களுக்கான பேச்சு, கூட்டுறவுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பட்டிமன்றம் நாடகம், நடனம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நன்றியுரையை கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான செயலாளர் சிவகுமார் ஆற்றினார்.

இந்நிகழ்வில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

# விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டைகள்: யாழ். விவசாய சங்கங்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கு இராணுவத்தின் விசேட அடையாள அட்டைகள் வழங்கியுள்ளமை விசனத்திற்குரியது என யாழ். விவசாய சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.**

அரியாலை கிழக்கு பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபடும் மக்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் விசேட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளதுடன் தென்மராட்சி பிரதேசத்தின் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கும் விசேட அடையாள அட்டைகளை வழங்க படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

படையினரின் இந் நடவடிக்கைக்கு விவசாய சங்கங்கள் கண்டனம் தெரிவித்திருப்பதுடன் படையினரின் இச் செயற்பாடுகளானது பொது மக் களை பெரும் விசனத்திற்கு உள்ளாக்கி இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (28)

# மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

யாழ். மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதால் இங்கு வைத்திய செயற்பாடுகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

மந்திகை வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு சுமார் 15 வைத்தியர்கள் தேவைப்படுகின்றபோதும் இங்கு தற்பொழுது ஐந்து வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் இங்கு சிகிச்சைகளுக்காக வரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான முறையில் சிகிச்சைகளை வழங்க முடியாத நிலைமை உள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சில அத்தியாவசிய வைத்திய சேவைகளுக்கு ஏற்ற வைத்தியர்கள் இங்கு இல்லாதிருப்பதனால் அவசர வைத்திய சேவைகளுக்காக நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கோ அன்றி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கோ அனுப்பி வைக்க வேண்டிய நிலை உள்ளதாகவும், அதிகாரி கள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

# மணிக்கூடு வியாபாரிகள் மீண்டும் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு வெளி நாட்டு மணிக்கூடு வியாபாரிகள் மீண்டும் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

சீனா, தாய்லாந்து, கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மணிககூடு வியாபாரிகள் இவ்வாறு வந்துள்ளனர். இவர்களில் பலர் வியாபாரம் என்ற போர்வையில் தமிழர்களுடைய கலாச்சாரத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பொலிசாரினால் இவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், மற்றும் குடாநாட்டில் உள்ள சில இடங்களில் வெளி நாட்டினர் தங்கி இருந்து கலாச்சார சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## மஹோற்சவம்

(வலிகாமம்)

வரலாற்றுப் பெருமை பொருந்திய தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயப் பெருந்திருவிழா கடந்த நான்காம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்களாக நடைபெற்று வருகின்றன.

இம் மஹோற்சவத் திருவிழாவில் நாளை காலை ஒன்பது மணிக்குத் தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. மறுநாள் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (37)

# தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளருக்கு சேவைநலன் பாராட்டு

(வலிகாமம்)

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் திருமதி றெஜினா இருதயநாதனுக்கு சேவை நலன் பாராட்டு வைபவம் ஒன்றை நடாத்துவதற்கு வலிகாமம் வலய அதிபர்கள் சங்கத்தின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி சமீபத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி றெஜினா இருதயநாதனின் சேவையைப் பாராட்டியே பிரியாவிடை ஒன்றை நடாத்துவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (37)

# மின்சார சபைக்கு பணம் செலுத்தியும் மின்சார வசதி இதுவரை இல்லை

(தென்மராட்சி)

தென்மராட்சியில் மின் இணைப்புக்கு சாவகச்சேரி மின்சாரசபைக்கு பணம் செலுத்தி மாதங்கள் பல கடந்து விட்ட நிலையில் தமக்கு மின்சாரம் இதுவரை கிடைக்கவில்லை எனப் பொது மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களிடம் முறைப்பாடு செய்திருப்பதாக தெரிய வருகிறது. பல இடங்களில் கணிப்பீட்டு மானி பொருத்தப்படாமல் மின்சார கட்டணம் அறவிடப்படுவதாகவும், எனவே மின் இணைப்புக் கோரி பணம் செலுத்தியவர்களுக்கு உடனடியாக மின்சாரம் கிடைக்க சம்பந்தப்பட்ட சாவகச்சேரி மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் தமது முறைப் பாட்டில் தெரிவித்துள்ளனர். (28)

# சாவகச்சேரி நகராட்சிமன்ற உள்ளூராட்சி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் 2005ம் ஆண்டுக்கான உள்ளூராட்சி விழா வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நகரசபை வளாகத்தில் நகரசபை செயலாளர் திருமதி ஆறுமுகம் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் கே. கணேஷ்வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதி பிள்ளை, யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சாவகச்சேரி பிரதேச செயலாளர் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் இந்த நிகழ்வில் உள்ளூராட்சி வார சிறப்பு மலர் வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளும் நடைபெற இருப்பதாக நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார் (28)

# சலுகை விலையில் நல்லின தென்னங்கன்று

(யாழ்ப்பாணம்)

அரியாலை விவசாய சம்மேளனத்தினரால் நல்லின வகை தென்னங்கன்றுகள் சலுகை விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது. இவற்றை பெறவிரும்பும் மக்கள் அப்பகுதி கிராம அலுவலரிடம் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளும்படியும் விரைவான வளர்ச்சியும் குறைந்த ஆண்டுகளிலேயே காய்க்கும் திறன்கொண்ட இத் தென்னங்கன்றுகளை முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளும் படியும் அரியாலை விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது. (28)

# கோப்பாய் பிரதேசத்தில் 89 வீடுகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

கோப்பாய் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு 89 வீடுகளை புனரமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் 29 வீடுகளை உலக வங்கியும் 60 வீடுகளை ஜி.ரி.இசற் நிறுவனமும் புனரமைத்துக் கொடுக்க முன் வந்து உள்ளதாகவும், கோப்பாய் தெற்கு உதயதாரகை கிராமம், பத்தை மேனி புத்தூர் வடக்கு உரும்பிராய் கிழக்கு, நீர்வேலி வடக்கு போன்ற கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட இருப்பதாகவும் இந் நிறுவன அதிகாரிகள் தெரி விக்கின்றனர். (28)

# உற்சவ காலத்தில் இரத்தம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை யின் இரத்த வங்கி மூலம் நல்லூர் உற்சவ காலத்தில் 141 பைந் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்த வங்கிப் பிரிவினரால் நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை மூலம் திருவிழாக் காலங்களில் சுயமாக முன் வந்து இரத்ததான கொடையாளிகளால் இவை கொடுக்கப்பட்டதாக இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இந்த நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தும் முயற்சிகளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரும் தீவிரமாக பாடுபட்டதாகவும், இச் சேவைகளில் இவ் அமைப்புக்களைச் சேர்ந்த தொண்டர்கள் சிறப்பாக செயற்பட்டதாகவும் இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (28)

## ஊர்காவற்றுறையில் மனித உரிமை கருத்தரங்கு

ஊர்காவற்றுறையில் வரும் 17,18 ஆகிய இரு தினங்களில் மனித உரிமை அமைப்பினால் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். சமூகத்தில் சிறுவர்கள், பெண்கள் மீது நாளாந்தம் இடம்பெற்று வரும் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான விழிப்புணர்ச்சியை இப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்தவே இக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலக, மாநாட்டு மண்டபத்தில் இக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (28)

# பாதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வழி செய்யவும்

## பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்

பாதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரை பாராளு மன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தங்களது மாகாணக்கல்வி அமைச்சினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உள் வாங்கப்பட்டு பயிலுனர்களாகக் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் பல நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் நிரந்தர நியமனம் கிடைக்காத நிலையில் பாரிய மனப் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

1995 ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின் படி 180 நாட்கள் பயிலுனர்களாக இருந்தவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பது முடிவாகும். ஓர் போட்டிப் பரீட்சை முடிவுகள் நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பு ஒவ்வொரு பரீட்சாத்திக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதே நியதியாகும். எனினும் இந்த நியமனமானது பட்டதாரி பயிலுனர்களை ஆசிரியநிரந்தர நியமனமாக்கும் விடயத்தில் பின்பற்றப்ப டவில்லை.இதன் காரணமாகவே பெருமளவான பயிலுனர்கள் தமது நிரந்தர வேலை வாய்ப்பை இழந்துள் ளனர். இவர்களின் நூற்றுக்கணக்கா னோர் 1999 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற வர்கள் திருமணமாகிய பின்ன ரும் இன்று வரை நிரந்தர நியமனம் கிடைக்காத நிலையில் மனப்பாதிப் படைந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களது நிலைமையினை கருத்திற் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அதே நியமனத்திகதியுடன் நியமனம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## வேலணை பிரதேச சபைக்கு புதிய கட்டட வசதி

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குப் புதிய கட்டம் ஒன்று நீரப் திட்டத்தின் உதவியுடன் 90 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக வேலணை பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். அனைத்து வசதிகளுடன் அவ் அலுவலகம் கட்டப்பட்டு வருவதாகவும், இக் கட்டடப் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு, இப் புதிய கட்டடத்தில் விரைவில் வேலணை பிரதேச சபை இயங்கும் என்றும் இப் பிரதேசத்தில் நிலவி வரும் அடிப்படை குறை பாடுகள் நிவர்த்தி செய்ய பிரதேச சபை பாடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (28)

# பா.ஜ.க.வின் திட்டம் கைகூடுமா?

இந்திய அரசில் வெகு விரைவில் ஒரு அரசியல் மாற்றத்தை கொண்டு வரவேண்டும் என்பதில் எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக்கட்சி மிகவும் மும்முரமாக நிற்கின்றது. அதுவும் மத்தியில் இருக்கும் தற்போதைய காங்கிரஸ் கூட்டணி யை தரைமட்டமாக்கி தமதாட்சியை நிலை நாட்டுவதே அக்கட்சியின் பிரதான குறி என்பதை அக்கட்சியின் செயற்பாடுகள் படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை என்றேதான் நம்பத் தோன்றுகின்றது.

ஏனெனில் பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரை பலவிதமான சர்ச்சைகளோடு முடித்துக்கொண்ட அக்கட்சி கடந்த வாரம் தமது தேசிய செயற் குழுக் கூட்டத்தில் பலவிதமான அதிரடி நடவடிக்கை களுக்கு தூபமிட்டுள்ளது எனலாம்.

இந்த வகையில் நடந்து முடிந்த பா.ஜ.க.வின் தேசியச் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஓர் ஆருடம் கூறியிருக்கின்றார். அதாவது வெகு விரைவில் மத்தியிலுள்ள காங்கிரஸ் கூட்டணிஆட்சி கேள்விக்குறியாகும்(?) அதனையடுத்து தேர்தலுக்கு காங்கிரஸ் கூட்டணி தயாராகும் (?) அதனால் நாமும் தேர்தலை சந்திக்க தயாராகவே எப்போதும் எந்நாளும் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

அதாவது பாரதிய ஜனதாக் கட்சிக்கு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உற்சாக மருந்து கொடுத்துள்ளார். என்று தான் நம்பத்தோன்றுகின்றது. அதற்கு காங்கிரஸ் கூட்டணிக்குள் நடைபெறும் சடுகுடு ஆட்டமே பிர தான காரணம் என்று கூற வேண்டும்.

ஏனெனில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கூறிய ஆருடம் மெய் யாகுமா...? என்பதை விடவும், காங் கிரஸ் கூட்டணிக்குள் கசமுசாவும் அதனால் மத்தியரசு திரிசங்கு சொர்க் கத்தில் இருப்பதும் கொஞ்சம் ஊன்றி கவனித்தால் புரியாத விடயமல்ல.

ஏனெனில் மத்தியரசு காங்கிரஸ் கூட்டணியின் ஓராண்டுப் பூர்த்தியில், பிரதமர் மன்மோகன்சிங் தமக்கு தாமே சோதனை களமமைத்துக் கொண்டு செயற்பட்டதாகவேதான் அலசப்படுகின்றது. இதனால்தான் மன்மோகன்சிங் அரசு ஓராண்டு சாதனையில் 35 புள்ளிகளைப் பெற் றுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

இதற்கான காரணங்கள் பல வாறாக அடுக்கப்படுகின்றன. இவற் றில் பிரதானமானது, கூட்டணிக்கட்சி கள் கொடுக்கும் தலைவலிதான் என்று நம்பத் தோன்றுகின்றது. அந்த வகையில் மத்தியரசின் அச் சாணியாகக் கருதப்படும் இடது சாரிக்கட்சிகளே அரசுக்கு தடங்கல் களைப் போடுவதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே இடதுசாரிக்கட்சிகள் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவளிக்க இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. கலவரங்களையும் வகுப்பு வாதங் களையும் உருவாக்கும் சக்திகள் மத்தியில் இருக்கக்கூடாது. குறைந்த பட்ச திட்டத்தின்படி அரசு செயற் படல்.

இவற்றை ஏற்று கொண்டதா லேயே காங்கிரஸ்சுடன் இடது சாரிகள் கூட்டணிக்கு கை கோர்த் தன. ஆனால் மத்தியில் ஆட்சியை பிடித்ததுமே காங்கிரஸ் தமது திட்டத்தில் இரண்டாவதை நிறை வேற்றுவதில் பின்னடிப்பதாகவும். அதற்கு நேர் எதிராக செயற்படு வதாகவும் இடது சாரிகள் குற்றச் சாட்டுக்களை அடுக்கி வருகின்றமை தெரிந்ததே.

தற்போது இலாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை மத்தியரசு தனியாருக்கு விற்றிருப் பதாலேயே இடதுசாரிகள் குமுறு கின்றன.

ஏனெனில் பொதுத்துறை நிறு வனங்கள், இந்தியப் பொருளா தாரத்தின் முது கெலும்பு அவை அரசாங்கத்தின் மக்கள் சொத்துக்கள் ஆதிவாசிகள்,பிற்படுத்தப்பட்டோர், தலித்துக்கள் எனும் மக்கள் பிரிவினர் இத்தகைய நிறுவனங்களிலேயே பணிபுரிகின்றனர். எனவே இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பை காங்கிரஸ் கூட்டணி நசுக்கப்பார்ப் பதாகவேதான் இடதுசாரிகள் வெகுண்டெழுந்தன.

ஏற்கனவே காங்கிரஸ், மத்திய கனரக மின் உற்பத்தித்தொழிற் சாலையின் (பெல்) பத்து சதவீதப் பங்குகளை தனியாருக்கு விற்பதற்கு முடிவு செய்தே விட்டது. இதனால் தான், மத்தியரசு கொடுத்த வாக்கை காப்பாற்றவில்லை, குறைந்தபட்ச செயற்றிட்டத்திலிருந்து மாறுபடு கின்றது, என்று இடதுசாரிகள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

ஏற்கனவே பாரதிய ஜனதா தன தாட்சியில்பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையை பங்குச்சந்தை சூதாட்ட பணக்காரர்களுக்கு விற்று விட்டது. இப்போது காங்கிரசும் அப் படியே தான் நடந்து கொள்கின்றது. அப்படியெனில் பொருளாதாரக் கொள்கையில் பாரதிய ஜனதாவுக் கும் காங்கிரசுக்கும் வேறுபாடு இல்லையே அதனை பகிரங்கமாக அறிவிக்கலாமே என்று இடதுசாரிகள் வினா எழுப்பியுள்ளன.

அத்துடன் கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று பகிரங்கமாக தமது கோபத்தை வெளிக்காட்டியுள்ளன.

இதனால் தான் இடதுசாரிகளின் பிரச்சினை எளிதாக வெடிக்கும். காங் கிரஸ் கூட்டணியிலிருந்து அவை வெளியேறும் காலம் அண்மித்து விட்டது. மத்தி யில் காங்கிரஸ் பெரும்பான்மை இழக்கும். மீண்டும் தேர்தல் வரும் என்று தற் போதைய எதிர்க்கட்சி திட்டவட்டமாக நம்புகின்றது.

அது மட்டுமன்றி,இத்தகைய சிக்கல்களையடுத்து அவசர அவச ரமாக சோனியாகாந்தி இடது சாரிகளை சந்தித்து சமாதானம் கூற முற்பட்டபோதும் இடதுசாரிகள் மசிந்து கொடுக்கவில்லை. குறைந்த பட்ச செயற்றிட்டத்தை அமுல் படுத்த முடியாது என்றால் இன்னொரு திட்டத்தை உருவாக்கலாம்.. அத்துடன் பெல் நிறுவனப் பங்கு களை மட்டுமல்ல எந்தப் பொதுத் துறை நிறுவனப் பங்குகளையும் விற்பதில்லை என்று சொன்னால் சமூகநலப்பணிகளுக்கு நிதிதேவை. அதை எவ்வாறு திட்டமிடலாமென்று நீங்களே கூறுங்கள் என்று சோனி யாகாந்தி சிக்கலை இடதுசாரிகளிடமே விட்டுவிட்டார்.

ஆனால் எதனையுமே இடது சாரிகள் காதில்போட்டுக்கொள்வதாக இல்லை ஓசையின்றி அந்நிய முதலீடுகள் உள்ளே வந்து குவிகின்றன. பெட்ரோல், டீசல் விலைகள் உயர்த்தப்படுகின்றன. மண்ணெண்ணெய்யும் எரிவாயுவும் தமது நெருக்குதலாலேதான் கூடி பின்னர் குறைக்கப்பட்டன.

அது மட்டுமன்றி பத்திரிகை துறையிலும் அந்நிய முதலீடுகள் சத்தமின்றி நுழைந்துகொள்வதற்கு மத்தியரசு பச்சைக்கொடி காட்டியிருப் பதையும் இடதுசாரிகள் இனம் கண் டுள்ளன.

ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களாலும் இடது சாரிகள் கனன்று கொண்டுதான் இருக் கின்றன.

மூன்றாவது உலக நாடுகளில் ஜனநாயகத்தை அமெரிக்காவோடு சேர்ந்து இந்தியா காப்பாற்றும் எனும் ஒப்பந்தத்தில் பிரதமர் மன்மோகன்சிங் கைச்சாத்திட்டாலும் கைச்சாத்திட்டார் இங்கே இந்தியாவில் பிரளயமே வெடிக்காத குறைதான்.

உலக நாடுகளிலெல்லாம் தலை யிடுவதே அமெரிக்காவின் வேலை. தனக்கு சாதகமாக எவர் நடக்கின் றார்களோ அவர்களே அந்நாட்டின் ஆட்சியிலிருக்கவேண்டும். அதற்காக அமெரிக்கா எந்த விலையையும் எத்தனை உயிர்களையும் கூட கொடுப்பதற்கு பின்னிற்பதில்லை அப்படிப்பட்ட ஜனநாயகத்திற்காக பிரதமர் மன்மோகன்சிங் புஷ்ஷுடன் சேர்ந்து கொண்டுள்ளார் என்று அப்போதே இந்தியாவில் பல தரப்பட்ட கட்சிகளாலும் பிரதமர் விமர்சிக்கப்பட்டார்.

அது மட்டுமன்றி எங்களை கேட்காமல் அமெரிக்காவுடன் எப்படி ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்..? கூட்டணியில் நாம் எதற்கு ..? என்று அப்போதே இடதுசாரிகள் குரல் எழுப் பியதும் தெரிந்ததே.

எனவே மத்தியரசின் மீது இடது சாரிகளின் காழ்ப்பு நாளுக்கு நாள் வளர்கின்றதே தவிர, குறைந்த பாடில்லை அதற்குத்தோதாக மத்தியரசும் ஏதாவது தில்லு முல்லு களை செய்து கொண்டுதான் இங் கிருக்கின்றது.

அண்மையில் கூட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் இந்தியா வந்தமை கூட, மத்தியரசின் மீது பலவித சந்தேகங் களை கிளர்ந்தெழ வைத்திருக் கின்றது.

அதாவது ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக குழாய்மூலம் எரிவாயு இந்தியாவுக்கு கொண்டு வருவதை அமெரிக்கா விரும்ப வில்லை. ஈரான் அணுகுண்டு தயாரிப் பதாக உலகரங்கில் அமெரிக்கா முழங்கியதையடுத்தே கொண்ட லிசாரைஸ் இந்தியா வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாகிஸ்தானுக்கும் ரைஸ் சென்றமை, அமெரிக்காவின் திட்டத் தை படம்போட்டுக் காட்டியிருக் கின்றது.

இடதுசாரிகளைப்பொறுத்தவரை ஈரானிலிருந்து பாகிஸ்தான் ஊடாக எரிவாயு திட்டத்தை வரவேற்கின்றன. அதனை செயற்படுத்துவதில் மத்திய எண்ணெய் வளத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயரும் இடதுசாரிகளும் மும்முரமாய் செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் தான் ரைஸ் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மாறி மாறிப் பறந்தார். இதனாலும் இடதுசாரிகள் மிகவும் நொந்து போயுள்ளன.

அதாவது மத்தியரசு அமெரிக் காவின் பொம்மையாக செயற்படப் போகின்றது என்பதில் இடதுசாரிகள் கவலை கொள்கின்றன. மறுபுறம் தம்மை அவமரியாதை செய்வதாக கோபமும் கொள்கின்றன. அதனால் தான் வெகு விரைவில் தேர்தல் வரலாம் .... என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன.

காங்கிரசைப் பொறுத்தவரை இடதுசாரிகளின் முதுகில் சவாரி செய்யவும் வேண்டும். அந்தக் குதிரைக்கு விருப்பமில்லாத பாதை யில் பயணிக்கவும் வேண்டும் என்றால் அது நடக்கின்ற காரியமா..? என்பது சந்தேகம்தான். மறுபுறம் இடதுசாரி சரிப்பட்டு வராது என்றால், புதிய குதிரைகளின் மீது (கட்சி) தான் சவாரி பண்ண முடியும். இதுவும் சாத்தியமா...? என்பதும் வினாதான்.

எனவே பொருளாதார கொள்கை களில் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங், நிதியமைச்சர் ப.சிதம்பரம், திட்டக்குழுத்தலைவர் அலுவாலியா ஆகியோரின் பின்னே செல்லப்போகின்றனவா? அல்லது இடதுசாரிகளின் பின்னே பயணிக்கப் போகின்றனவா? என்பதை விரைந்து முடிவு செய்யவேண்டும். இல்லையேல் எதிர்க்கட்சிகளின் ஆருடம் உண்மை யாகிவிடும் என்றால் மிகையில்லை.

**அ.கலைவாணி**

O O O


வாஜ்பாய்


அத்வானி


சோனியாகாந்தி


மன்மோகன்சிங்

# கிராமிய அபிவிருத்தி வங்கி தொழில்முயற்சிக்காக 233 பயனாளிகளுக்கு ரூ 1.19 கோடி கடன் வழங்கல்

(விசுவமடு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் கிராமிய அபிவிருத்தி வங்கி ஓகஸ்ட் மாதத்தில் 233 பயனாளிகளுக்கு ஒரு கோடியே பத்தொன்பது இலட்சத்து பன்னீராயிரம் ரூபா பணத்தைக் கடனாக வழங்கியுள்ளது.

தமிழீழப் பரப்பில் வாழும் மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் தமது வாழ் வாதாரத்திற்கான தொழில் முயற்சிகளை மேற்கொள்ள பண வசதி இன்றி கஷ்ரப்படுவதனை நீக்கி மக்களின் பொரு ளாதாரத்தை மேம்படுத்தும் நோக்காக பல கடனுதவித் திட்டங் களை கிராமிய அபிவிருத்தி வங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் நெல் உற்பத்தி மேற்கொண்ட விவ சாயிகள் நெல் அறுவடைக்கு கூலி ஆட்கள், தட்டுப்பாடு, காரணத்தினால், நெல் அறுவடை மேற்கொள்ள பல நெருக் கடிகளை சந்தித்தவேளை கிராமிய அபிவிருத்தி வங்கி இரண்டு சில்லு அறுவடை இயந்திரத்தினைப் பெற்று விவசாயி களுக்கு கடனாகவழங்கியுள்ளதால் விவசாயிகளின் அறுவடைத் தேவை ஓரளவு பூர்த்தியாக்கப்பட்டது.

இந்த வகையில் மன்னார், கிளிநொச்சி,ஒட்டுசுட்டான், பூநகரிப் பிரதேசங்களில் நெல் அறுவடை செய்து உடன் நெல்லை வேறாக்கும் ஐந்து இயந்திரங்கள் ஒவ்வொன்றும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியானவை கடனாக வழங் கப்பட்டன.

இதனை விட தொழில் முயற்சி மற்றும் விவசாய நட வடிக்கை, உழுபொறி கொள்வனவு, வியாபார நடவடிக்கை மற்றும் சூரிய மின் கலங்கள் 33 குடும்பங்களுக்கும் கடனாக வழங்கப்பட்டன.

இதனால் முயற்சி இருந்தும் முதல் இல்லாத மக்கள் பலர் நன்மையடைந்துள்ளனர்.

(465)




# எதிர்காலம் ஒளிமயமானது

இன்றைய உலகில் இளைய சமுதாயத்தை ஜுரம்போல் தொற்றிக்கொண் டுள்ளது விளையாட்டு என்றால் மிகையில்லை.

இந்த வகையில் தெற்காசியாவைப் பொறுத்தவரையில் கிரிக்கெட் இவர்களுடன் கூடப் பிறந்த ஒன்றாக மாறிவிட்டதோ என எண்ணத்தோன்றுகின்றது.

இதில் சர்வதேசப் போட்டி முதல் உள்ளூர் போட்டிகள் வரை விதிவிலக்கு கிடையாது. சர்வதேச போட்டி முடிவுகளை அறிய ஆலாய் பறக்கும் இளைய சமுதாயம் அவர்களின் பந்துவீச்சு, துடுப்பாட்ட நுட்பங்களைத் தொலைக்காட்சியில் மட்டும் பார்த்து அகத்துறிஞ்சி சாதாரண மென்பந்து (TNIS Boll) போட்டியில் ஆடும் விதம் ரசிகர்களுக்கு கண்கொள்ளாக்காட்சியாக அமைவதை காணக் கூடியதாகவுள்ளது.

வீரர்கள் பந்து வீசும் விதம், துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பாடும் விதம் என்பன சர்வதேசப் போட்டியைப் போன்று நிதானம் இடையிடையே அதிரடி



என்று ரசிகர்களுக்கு விருந்தாக அமைகிறது.இது சிறந்த வீரர்கள் பலரை வெளிக்கொணர திறவுகோலாகவும் அமைந்துள்ளது.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கொண்ட மென்பந்து போட்டிகள் விளையாட்டில் கிளி, முல்லை மாவட்டங்களின் வளர்ச்சி பெருமைகொள்ளும் வகையில் இருந்துள்ளது.



குறிப்பாக கடந்த மாத ஆரம்பத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியால் நடத்தப்பட்ட மென்பந்துப் போட்டி, முழங்காவிலில் நடைபெற்ற போட்டி மற்றும் கிளிநொச்சி விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் இம்மாத ஆரம்பத்தில் தருமபுரம் இளந்தாரகை விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பெற்ற போட்டி, மற்றும் கிளி.மத்திய விளையாட்டு மைதானத்தில் தற்பொழுது நடைபெறும் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் போட்டிகள் சவால் நிறைந்ததாகவும் பரபரப்பு மிக்கதாகவும் அமைந்துள்ளது.

இதில் கிளிநொச்சி விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்பட்ட போட்டி முற்றிலும் வித்தியாசமான முறையில் அமைந்திருந்தது.

சர்வதேச போட்டிகளைப்போன்று அணிகள் வர்ண உடைகளுடன் காணப்பட்டமை, மற்றும் குறித்த நேரத்தில் அணிகள் சமுகமளித்தமை போன்றன அணிகளின் கட்டுக் கோப்பை வெளிப்படுத்தின.



இதில் சம்பியனான இளந்தாரகை அணி இறுதிப்போட்டிவரை முன்னேறியதைப் பார்த்தால் அது ஒரு சர்வதேச போட்டியைப் பார்க்கும் விதத்திலேயே அமைந்திருந்தது.

இத்தனைக்கும் பந்துவீச்சு, துடுப்பாட்டம் அபாரமாக இருந்ததுடன் அணி நெருக்கடியைச் சந்திக்கும் போது சுதாகரித்து ஆடி அணியை வெற்றிநோக்கி நகர்த்தியமை மற்றும் எதிரணியை சுருட்டிய விதம் எல்லாம் உணர்ச்சி வசப்படக்கூடிய வகையில் அமைந்திருந்தது.

இது இவ்வாறிருக்க ஏனைய அணிகளிலும் குறைவில்லை. சிறப்பான இணைப்பாட்டம் , அதிரடியாட்டம், தனிப்பட்டவர் ஓட்டம் என்றெல்லாம் பிரமாதம். இதில் இளந்தாரகை அணியின் சிறப்பாட்டக் காரராக தெரிவான லோகீசன் தொடர் நாயகனாக தெரிவான சாரங்கன் ஆகியோரின் பணி சிறப்பாகவே அமைந்திருந்தது.இத்தெரிவு ஏனைய வீரர்களையும் வீறுகொண்டெழ வைக்கும்.இது வீரர்கள் சாதிக்க தயாராகிவிட்டதையே வெளிக்காட்டுகின்றன.

ஆனால் மென்பந்து கிரிக்கெட் போட்டி மூலம் சர்வதேச ரீதியில் சாதிக்க முடியாதது என்பது ஏமாற்றமானதாக இருக்கின்றபோதும் மென்பந்தில் அவர்கள் ஆடும் திறனை அவதானிக்கும் போது கடினப்பந்து போட்டி கடினமான தொன்றாக இருக்குமா என்பது சந்தேகமே.எது எவ்வாறு இருப்பினும் மென்பந்தில் கிளி. முல்லை மாவட்டங்களில் உச்சதிறன் கொண்ட அணிகள் உருவாகிவிட்டன என்பதை மட்டும் துணிந்து கூறலாம்.

இது ஒட்டு மொத்தத்தில் ஆரோக்கியமான இளைய சமுதாயத்தை உருவாக்க ஏதுவாக அமைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் அகில இலங்கை ரீதியில் கிளி.,முல்லை. மாவட்ட அணிகள் மென்பந்துப்போட்டியில் சம்பியனானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இ. சியான்.

# கடமையைக் கண்ணாய்க்கொள்



ஒரு அணியின் வெற்றி தோல்வி என்பது அதன் பயிற்றுவிப்பாளரின் பங்களிப்பு முக்கிய விடத்தை வகிப்பதென்பது அனைவரும் அறிந்ததொன்று.

அந்த வகையிலே, அவர் உள்நாட்டவராகவோ, அன்றி வெளிநாட்டவராகவோ இருப்பது அந்நாடுகளைப் பொறுத்ததொன்றாக இருக்கும் அதே வேளை, அவர்களும் முழு மனதோடு தங்கள் பணிகளை செய்ய முன்வருதல் வேண்டும். அவ்வாறே அனைவரும் செயற்படுகின்றனர்.

இதில் வெளிநாட்டவர் ஒருவர் ஒரு அணிக்கு பயிற்சியாளராக இருப்பாரேயானால் அவர் தன் மீதான நம்பகத்தன்மை இழக்கப்படா வண்ணம் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

இந்த நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளர் இயன் சப்பல் மீது அவநம்பிக்கை கொள்ளும் வகையில் அவரின் அண்மைய ஆஷஸ் தொடர் குறித்த கூற்றுக்கள் அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில், இவர் அவுஸ்திரேலியாவைப் பிறப்பிடமாகக் கொண்டதாலும், அவுஸ் அணிக்காக விளையாடியவர் என்பதாலும் அவர் ஆஷஸ் தொடர் பற்றிப் பேசியிருக்கலாம்.

ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின் வீழ்ச்சிக்கு பயிற்றுநர் ஜோன் பூக்கானன்தான் பொறுப்பேற்க வேண்டும்" எனத் தெரிவித்திருந்தார்.

இம்முறை இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தின் கைஓங்கியுள்ளது அனைவரும் அறிந்ததொன்று.இந்நிலையிலேயே சப்பல் மேற்படி கூற்றை வெளியிட்டுள்ளார்.

சப்பலைப் பொறுத்து தன்னுடைய தாய்நாட்டின் மீதிருந்த அதிக அக்கறை காரணமாகவே மேற்படி கருத்தைத் தெரிவிக்க அவரைத்தூண்டியது என்பதை கூறித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

ஆனால், ஒரு அந்நிய நாட்டுக்குப் பயிற்சியாளராக இருந்து கொண்டு இவ்வாறு கூறுதல் என்பது அவர் மீது அவநம்பிக்கை கொள்ளவே வைக்கும்.

எனவே, இவர் தாய்நாட்டின் மீது அதிக அக்கறை கொண்டிருந்தால் அந்நாட்டின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்க முற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து அந்நிய நாட்டுப் பயிற்சியாளராக வர எண்ணுவது / செயற்படுவது அவ்அந்நிய நாட்டுக்கு அது ஆரோக்கியமளிக்கும் ஒன்றாக இருக்காது.ஏனெனில், இவர் பயிற்சியாளராகக் கடமையாற்றும் அணி, இவரின் தாய்நாட்டு அணியுடன் மோதும் ஆட்டங்களில் அவர்களுடைய பலவீனங்களைக் கண்டறிந்து வெற்றிகொள்வதற்கான யுக்திகளை வழங்கி வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வாரா என்ற கேள்வி எவருக்கும் எழும் ஒன்றாகவே இருக்கும்.

எனவே, வெளிநாட்டு பயிற்சியாளராக இருக்கும் ஒருவர் அந்நாட்டு அணியை சிறப்பாக வழி நடத்த முற்பட முனைய வேண்டுமே தவிர தாய் நாட்டு அணி மீது அக்கறை கொண்டவராக இருந்தால் இவரின் பயிற்சியாளர் பணி முழுமை பெறாமல் போய்விடும். அதேவேளை, அந்நாட்டு ரசிகர்களுக்கும், வீரர்களுக்கும் தேவையில்லாத சந்தேகங்களை எழ வைப்பதாகவே இருக்கும்.

இதை உணர்ந்து செயற்பட வேண்டிய நிலைக்கு சப்பல் ஆளாகியுள்ளார்.

எனவே, இந்திய அணியின் அடுத்த போட்டித் தொடர்கள் அவரின் பயிற்சியாளர் பணிக்கு சவாலானதொன்றாகவே இருக்கும்.

பூ. சுபானந்

# பிரேசிலின் அஸ்திரம்

உலகக் கால்பந்தாட்டத்தில் தொடர்ந்து பலமான அணியாக பிரேசில் கருதப்படுவது போல அணிக்கு நிறைய திறமையான வீரர்கள் இருப்பதையும் மறுக்க முடியாது அந்தவகையில் அவ்வணியில் நட்சத்திர வீரராக முன்வரிசை வீரர் அட்ரியானோவைக் குறிப்பிடலாம்.

அவ்வணியின் செனால்டோ, காகா, றொனால்டினோ றொபீர்ட்டோ, காலோஸ், றொபினோ, டேனியல்சன், கப்ஹு எமர்சன், றிகாடோ, ஒலிவேரா ஆகிய வீரர்களில் இவரை முன்வரிசையில் வைக்கலாம்.இம்முறை ஜேர்மனியில் நடைபெற்ற உதைபந்தாட்ட ஒன்றிய கிண்ணப்போட்டியில் 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரேசில் வென்றமை அட்ரியானோவின் திறமையிலாகும். அத்தொடரில் அவர் மட்டும் ஐந்து கோல்களை அடித்து வெற்றிக்கு வழிசமைத்தார். தொடரின் அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனிக்கெதிராக ஒரு வெற்றிக்கான கோலையும் இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவுக்கெதிராக இரு கோல்களையும் அடித்தமை சிறப்பம்சமாகும். அதனால் அவருக்கு தொடர் ஆட்டநாயகர் விருதாக தங்கக் காலணி பரிசாக வழங்கப்பட்டது.

எனினும் பிரேசில் அணியில் நிறைய திறமையான வீரர்கள் இருப்பதால் இவர் வெளியில் இருந்தே அணிக்காக போட்டியிட்டு வந்தார். எனினும் தற்போது றொனால்டோ ஓய்வில் செல்வதால் இவருக்கு அணியில் நிரந்தர இடம் கிடைத்துள்ளது. அதன்படி இவர் றொனால்டோவின் ஒன்பது என்ற எண் குறிக்கப்படும் மேலங்கியை அணிந்து முன்வரிசையில் ஆடி றொனால்டோ இல்லாத குறையை போக்குகிறார். அதேபோன்று அவரின் திறமையை வெளிக்காட்டி வருகிறார்.



அதனால் இவருக்கு பிரேசில் அணியில் றொனால்டோவுக்கு இருந்த ஆதரவும் அதேவேளை நிறைய சவால்களும் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் பிரேசில்அணி சிறந்த வீரரின்றி தடுமாறிக் கொண்டிருந்த வேளையில் அட்ரியானோ அணியில் இணைந்து அதனை நிவர்த்திசெய்தார்.அதற்கு உதாரணமாக அமெரிக்காவில் நடைபெற்ற "கொபா அமெரிக்கா" கிண்ணத்துக்காக நடைபெற்ற போட்டியில் திறமையான வீரர்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்தார்.

அட்ரியானோ 1982 ஆம் ஆண்டு றியோடி ஜனிரா நகரில் பிறந்தார். இவர் முதன் முதலாக 1999 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெற்ற 17 வயது அணியில் பங்கேற்றதன் மூலம் உதைபந்தாட்ட உலகில் பிரவேசித்தார். அப்போட்டியில் அணி வெற்றிபெற்றாலும் இவரின் திறமை வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் 2001 ஆம் ஆண்டு ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற இளைஞர்களுக்கான போட்டியில் இவர் சிறப்பாக ஆடி அணியை வெற்றிபெறச்செய்தார்.

இவர் 18 ஆவது வயதில் தேசிய அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டாலும் அது நிரந்தரமானதாக இருக்கவில்லை இவர் அதற்கு வெகுகாலம் எடுத்தது. இதற்குக் காரணம் அங்கு நிறைய வீரர்கள் இருந்தமையாகும். அந்தவகையில் 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைக்கவில்லை.

இவரின் திறமை உச்ச நிலைக்கு வந்தமை 2004 ஆம் ஆண்டு "Furma" அணிக்காக விளையாடிய போதாகும். அத்தொடரில் 16 போட்டிகளிலும் 15 கோல்களை இவர் அடித்தார். இந்தவகையில் அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் இவர் புரட்சிகரவீரராக மிளிர்வார் எனலாம்.

வடிவேல்

# நவம்பர் மாதம் 16-21 இற்குள் சிறிலங்காவில் சனாதிபதித் தேர்தல்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 இலிருந்து 21 ஆம் திகதிக்குள் நடைபெறலாம் என எதிர்பார்ப்பதாக தேர்தல் திணைக்களத்தை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா உயர்நீதிமன்றத்தீர்ப்பின் படி இத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் இரண்டிற்குள் நடாத்தப்பட வேண்டும்.

சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலமும் முடிவிற்கு வருவதனால் அடுத்து வரும் இருகிழமைகளுக்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படக்கூடும்.

வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் ஆணையாளரின் சட்டபூர்வ அழைப்பின் பின்னரே தங்களது தேர்தல் அறிக்கைகளை வெளியிடவும் தீர்மானித்துள்ளனர். எனினும், தேர்தல் பிரச்சாரங்கள் தற்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டால் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களின் போது மிகவும் கடுமையான போக்கையே கையாள வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் ஜே.வி. பி.யும் ஹெல உறுமயவும் ஆதரவளிக்க முன்வந்துள்ளன.

ஆழிப்பேரலை நிவாரண நிதியினை புலிகளுடன் பகிர்ந்து கொள்வதில்லை என மகிந்த ராஜபக்ஷவும் முடிவெடுத்திருப்பதுடன், கடந்த மூன்றரை ஆண்டு காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையினையும் மீளாய்வு . செய்வதற்கும் தீர்மானித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு மீளாய்வினை விடுதலைப்புலிகள் நிராகரித்திருப்பினும், ராஜபக்ஷ இவ்வாறான ஒரு முடிவினை எடுத்திருப்பது மீண்டும் யுத்தம் ஆரம்பமாவதற்கான அறிகுறியாகவே கூறப்படுகிறது.

சிறிலங்காவில் முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியினையே மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர் எனவும் ரொய்ட்டர் மேலும் கருத்து தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவினாலேயே விடுதலைப்புலிகளுடனான ஒரு உடன்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் ரொய்ட்டர் கூறுகிறது.

அரசு தொழில் நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதனை எதிர்ப்பதும், தொழிலாளர் சங்கங்களுடன் மகிந்த ராஜபக்ஷ மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணி வருவதனாலும், இத் தேர்தல் முடிவு இறுதிவரை தெரியாமலே இருக்கும் எனவும் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# இனவாதக்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றால் கடவுள்தான் ராஜபக்ஷவை காப்பாற்றவேண்டும்


*அமைச்சர் டி.யு. குணசேகர*

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினரால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டாம் அதை கிழித் தெறியுமாறு பிரதமர் ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளதாகவும் இதனை மீறி செயற்படுவாரானால் கடவுள்தான் அவரைக் காப்பாற்ற வேண்டும் ,என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளரும் அரசியல் யாப்பு அமைச்சருமான டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

எமது, கட்சி இனவாதத்தையும் யுத்தத்தையும் எதிர்க்கின்றது ஜே.வி.பி.யின். 12 அம்சக் கோரிக்கைகள் மீண்டும் இந்த நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்தப்போகின்றது.

மேலும் வட கிழக்கு, மலையக தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறாமல் இந் நாட்டில் எவரும் சனாதிபதியாக வரமுடியா தென்பதை பிரதமர் தெரிந்து கொள்ள வேண்டும் என டி.யு.குண சேகர தெரிவித்துள்ளார்.-

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 25 |
| – | – |
| 07 | 08 |
| – | – |
| 1941 | 2004 |

**அமரர் உயர்திரு இராசேந்திரம்-வரதராசா**

*(முன்னாள் வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரி அதிபரும், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் வவுனியா- வடக்கு)*

*திதி:-13. 09. 2005*

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்து-இன்று ஓராண்டு சென்றுவிட்டதோ மறக்க முடியுமா உம்மை எங்களால்...*

இன்று 13.09.2005 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள முதலாம் ஆண்டு நினைவு கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்,நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்

4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை, (6702) குடும்பத்தினர்.

## அரும்புகள் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி-2005


13,15 வயதுப் பிரிவினருக்கானது வன்னிப் பெருநிலப்பரப்பின் பாடசாலைகள், கழகங்களுக்கிடையே நடாத்தப்படவுள்ள போட்டி எதிர்வரும் 26, 27,28 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதி 15. 09. 2005 விபரங்களையும் விண்ணப்பபடிவங்களையும் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்,
இளையோர் செயற்பாட்டு
நிறுவனம். (சி.12805)

## அடிப்படை ஆங்கிலப் பயிற்சி 2005

இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து உத்தியோகத்தர், பாடசாலைகளைவிட்டு விலகியோருக்கான வார இறுதி (சனி, ஞாயிறு) அடிப்படை ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பப்படிவங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்,
இளையோர் செயற்பாட்டு
நிறுவனம். (சி.12806)



# பாகிஸ்தான் தீவிரவாதத்தை அழித்தால்தான் யுத்தநிறுத்தம் பற்றிப் பரிசீலிக்க முடியும்

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்



(பாரிஸ்)

பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளின் கட்டமைப்பு வசதிகளை அந்நாடு அழித்தால்தான் ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில் யுத்தநிறுத்தம் பற்றி பரிசீலிக்க முடியுமென்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகளின் எல்லைதாண்டிய ஊடுருவல் நிறுத்தப்படவேண்டும்.

இந்திய-பாகிஸ்தான் இடையேயான எல்லைக் கோட்டை மாற்றியமைக்கும் எண்ணம் இல்லை. இந்நாட்டு மக்களிடையே நல்லுறவு ஏற்பட்டு வர்த்தகத் தொடர்பு வருமானால் இந்தியா பாகிஸ்தானிடையே எல்லைக்கோடே தேவையற்றதாகி விடும் எனத் தெரிவித்தார்.

இதற்கு இருநாடுகளும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பாரிஸ்போய்ச் சேர்ந்த பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு வரவேற்பளிக்கப்பட்டது. இவரது இவ் விஜயத்தின் போது அந்நாட்டு சனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன் அங்குள்ள வர்த்தகர்களையும் கல்வியியாளர்களையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

இதேவேளை இந்தியா ஆக்கபூர்வ பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு தேவைப்படும் அணு உலைகள் மற்றும் அணுஎரி பொருட்களை பெறுவதிலுள்ள தடைகளை நீக்க பிரான்ஸ் முக்கிய பங்காற்ற வேண்டுமென்று பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

அணுசக்தி விநியோக அமைப்பு நாடுகள் விதித்துள்ள இத்தகைய தடையினால் இந்தியாவிற்கு ஆக்கபூர்வமான பணிகளுக்குத் தேவையான அணுஉலைகள் கிடைக்காமல் உள்ளதென்றும் அவர் கூறினார்.

பிரான்ஸ் சென்றுள்ள மன்மோகன் சிங் அந்நாட்டு பத்திரிகையொன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்கா சென்ற போது இது தொடர்பாக சனாதிபதி புஷ் உடன் பேச்சுவார்த்தை நடத்திய போது இதே கோரிக்கையை முன்வைத்ததாகக் கூறினார். இதனைப் பரிசீலிப்பதாக புஷ் கூறியதை நினைவுபடுத்திய மன்மோகன்சிங் இந்தியாவின் நியாயமான இக்கோரிக் கையை பிரான்ஸ் ஆதரிக்கும் என்று எதிர்பார்ப்பதாகக்கூறினார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியாவிற்கு நிரந்தர இடம் வழங்குவது குறித்து பிரான்சின் ஆதரவைக் கோருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாளை அமெரிக்கா செல்லவிருக்கும் பிரதமர் சனாதிபதியையும் சந்தித்துப் பேசவுள்ளார். ஐ.நா சபையின் கூட்டத்தில் கலந்துகொள்ளும் மன்மோகன்சிங் அங்குள்ள தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.



பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு ஓர்லி விமான நிலையத்தில் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது


## வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,

## நெக்ரெக்
## (NECTEC)
## தொழில் பயிற்சியும் தொழில் வாய்ப்பும்

### பயிற்சி நெறிகள்

01. மேசன் பயிற்சி :-
கட்டுவேலை, கொங்கிறீட்வேலை,கம்பிவளைத்தல், பூச்சுவேலை, மாபிள் பதித்தல், வெள்ளை வைத்தல், கொங்கிறீட்பெட்டி அடித்தல்.

02. தச்சுவேலைப் பயிற்சி:-
மூட்டுக்கள், தளபாடங்கள் செய்தல், கட்டடப் பொருட்கள் செய்தல், கூரை வேலை, சிற்ப வேலை, மட்டக்கூரை வேலை.

03, குழாய் இணைப்புப் பயிற்சி
PVC குழாய் இணைப்பு வேலை, G.I குழாய் இணைப்பு வேலை, கழிவுக்குழாய் பொருத்து வேலை,

☐ பயிற்சிக்காலம் :- மூன்று மாதம்

☐ பயிற்சிக்காலக் கொடுப்பனவு :- ரூபா 6000/= அதனுடன் உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.

☐ வயதெல்லை :- 18 தொடக்கம் 30 வரை

☐ சான்றிதழ் :- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

☐ தொழில் வாய்ப்பு :- பயிற்சி முடிவின் பின்னர் வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NECTEC) திறமைக்கேற்ப பணி வழங்கப்படுவதுடன், பணிக்கேற்ப மாத ஊதியமும் வழங்கப்படும்.

☐ நேர்முகத் தேர்வு :- 15-09-2005 தொடக்கம் 21-09-2005 வரை நடைபெறும். நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கும்போது தங்களது சுயவிபர ஆவணங்களுடன்சமுகம் தரவும்

☐ இடம் :- வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
((NECTEC)
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி,
(மகா வித்தியாலயத்திற்கு அருகாமை)
T.P 0212285917)

(சி-12814)


# தெளிவான பொருளாதார சிந்தனை ஜெயலலிதா அரசுக்கு இல்லை

*—மத்தியநிதியமைச்சர் ப. சிதம்பரம்*

(புதுடில்லி)

தமிழகத்தின் ஜெயலலிதா அரசாங்கத்திற்கு தெளிவான அடிப்படை பொருளாதார சிந்தனையோ மாநிலத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சிந்தனையோ இல்லை என மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தேவகோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள அ.இ. அதி.மு.க அரசு தேர்தல் வருவதைக் கணக்கில் கொண்டு சலுகைகளை அறிவிக்கின்றது என நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் இலக்கை மிஞ்சி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சாதனை படைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு விவசாயிகளுக்குக் கடன் வழங்க ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும் இதனை மிஞ்சி ஒரு இலட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதே போன்று 50 இலட்சம் விவசாயிகளுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டபோதும் 67 இலட்சம் பேருக்கு கடன் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெட்ரோல், டீசல் விலை இந்தியாவில் மீண்டும் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிவாயு, மண்ணெண்ணெய் விலையில் மாற்றமெதுவும் செய்யப்படவில்லை.

பெட்ரோல் விலை லீற்றருக்கு மூன்று ரூபாவும் டீசல் விலை லீற்றருக்கு இரண்டு ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலையேற்றத்தினால் பெட்ரோலியப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த விலை உயர்வு பற்றி முடிவு செய்வதற்காக மத்திய மந்திரி சபைக் கூட்டம் புதுடில்லியில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பெட்ரோல் மற்றும் டீசலின் விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது


## சுடர் ஒளி கல்வி நிலையம்

திருநகர்–கிளிநொச்சி

துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

| கலைப்பிரிவு 2005, 2006 | வணிகப்பிரிவு 2005,2006 |
|---|---|
| காலம்:–17.09.2005 /பி.ப.3.00 மணி | காலம்:–16.09.2005 /பி.ப.3.00 மணி |
| தமிழ்:– திரு. இ. வசிகரன் | பொருளியல்:– திரு. தி. திவ்வியரூபன் |
| புவியியல்:–திரு. இ. ஜெகதீபன் | கணக்கீடு:–திரு. வே. யோகப்பிரகாஷ். |
| இ. சமயம்–திரு. செ. சிவஞானம் | வணிகக்கல்வி:–திரு. தி. வரதன் |
| அளவையியல்–திரு. க. யோகராஜன் | |
| இ. நாகரிகம்–திரு. செ. சிவஞானம் | நிர்வாகி. |
| (6701) | |

ஓவல் டெஸ்ட் போட்டி

# பீற்றர்சன், ஹைல்ஸ் அற்புத துடுப்பாட்டம் ஆஷஸ் கிண்ணம் இங்கிலாந்து வசமானது







இங்கிலாந்து அணிக்கு பிளிண்டொப், பீற்றர்சன் கைகொடுக்க வானிலையும் ஒத்துழைக்க 17 வருடங்களாக அவுஸ்திரேலிய அணியால் தக்கவைக்கப்பட்ட ஆஷெஸ் கிண்ணம் இங்கிலாந்து வசமானது.

அவுஸ்திரேலிய அணியின் ஷேன்வோர்ன் மட்டும் சுழலில் மிரட்ட ஐந்தாவதும் இறுதியுமான ஓவல் டெஸ்ட் போட்டியை வென்று தொடரை சமன்செய்ய கடுமையாக போராடிய அவுஸ். அணிக்கு ஏமாற்றமே கிடைத்தது. இங்கிலாந்து வீரர்களின் பல பிடிகளை நழுவ விட்டமை இதற்கு முக்கியகாரணமாக அமைய பீற்றர்சன் ஹைல்கின் அற்புதமான இணைப்பாட்டம் இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையை 335 ஆக உயர்த்தியது. இதனால் போட்டி எத்தரப்பிற்கும் வெற்றிதோல்வியின்றி நிறைவு பெற்றது.

இதனால் ஏற்கனவே 2-1 என்ற நிலையில் முன்னிலை வகித்த இங்கிலாந்து எட்டு முறை ஆஷெஸ் கிண்ணத்தை வென்று இறுமாப்புடனிருந்த அவுஸ்திரேலிய அணியிடம் ஆஷெஸ் கிண்ணத்தை பறித்துக் கொண்டது.

பீற்றர்சன் 158ஓட்டங்களையும், ஹைல்ஸ் 59 ஓட்டங்களையும் பெற்றனர். 336 ஓட்ட வெற்றிஇலக்கு நோக்கி ஆடிய அவுஸ். நான்கு ஓட்டம் பெற்ற நிலையில் போட்டி முடிவுக்கு வந்தது.போட்டியின் முழுவிபரத்தையும் நாளைய தினசரில் எதிர்பாருங்கள்.

# பட்டம் வென்றார் பெடரர்



அமெரிக்க ஓபன் டென்னிஸ்ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டம் வென்றார். இந்த ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ்தொடர் அமெரிக்காவின், நியூயோர்க் நகரில் நடந்தது ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் அந்த்ரே அகாசியும் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும் மோதினர். இதில் 6-3, 2-6, 7-6, 6-1, என்ற செட் கணக்கில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்றார்.

# அவுஸ். வீரர்களுக்கு கொலை மிரட்டல்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஆஷெஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இந்த அணியின் வீரர்களுக்கு இணையத்தளம் மூலமாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 32 வயதான ஒருவரை வடக்கு இங்கிலாந்தில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு குறி வைத்துள்ளார். தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வீரர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை மிரட்டல் குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சங்கம் மிகுந்த கவலை வெளியிட்டுள்ளது. இப்பிரச்சினையில் முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ளது.

# ஆஷஸ் இறுதி டெஸ்ட் போட்டி ஒழுங்கில்லாத போட்டியாகிவிட்டது


- நடுவர் ரூடி கார்ஸ்டன்

இங்கிலாந்து அணி மழைகாரணமாக இரு முறை ஆட்டத்தை நிறுத்தியதால் ஆஷஸ் கிண்ணத்துக்கான இறுதியும் ஐந்தாவதுமான போட்டி ஒழுங்கில்லாத போட்டியாகிவிட்டதாக நடுவர் ரூடி கார்ஸ்டன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது; நான்காம் நாள் ஆட்டத்தின்போது நேற்று முன்தினம் வெளிச்சம் மங்கி வந்ததால் அவுஸ்திரேலியா சுழற்பந்து வீச்சாளர்களை பயன்படுத்த முடியாது விட்டதாகவும் எனினும் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களின் வேண்டுகோளின் பேரில் வெளிச்சம் போடப்பட்டதாகவும் அப்போதும் சுழல்பந்து வீச்சாளர்கள் பந்து வீசிக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று இரண்டாம் நாள் ஆட்டத்தின் போதும் அவுஸ்திரேலிய அணி வெளிச்சம் போதாமையினால் ஆட்டம் நிறுத்தப்பட்டதை எடுத்துக்கூறியுள்ளதுடன் எனினும் அவர்களுக்கும் நீடிப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

எனவே யார் என்ன கூறினாலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்த அணியும் டெஸ்ட் போட்டிகளில் ஆட முடியாது என்றும் தமக்கு அது பரவாயில்லை என்றும் தெரிவித்தார்.

# முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சுழலில் சுருண்டது பங்களாதேஷ்



சிறிலங்காவுக்கு கிரிக்கெட்சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று ஆரம்பமானது.

ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணித்தலைவர் பங்களாதேஷ் அணியை துடுப்பாட அழைத்தார்.

முதலில் ஆடிய பங்களாதேஷ் தனது முதல் இனிங்சிற்காக 188 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஹபிபுல்பசார் 84 ஓட்டங்களையும், யாவிட் ஓமர் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கணகேரத் நான்கு விக்கெட்டுக்களையும், முரளிதரன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டம் முடிவடைந்தபோது சிறிலங்கா அணி முதலாவது இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஜெயசூரிய 46 ஓட்டங்களையும் சங்கக்கார 30 ஓட்டங்களையும் பெற்றனர். இன்று போட்டியின் இரண்டாம் நாள்.

# உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி அவுஸ்திரேலிய அணி வெற்றி

2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் அணிகளில் தகுதிகாண் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

சொலமன் தீவுகள் அணிக்கெதிராக நடைபெற்ற இப் போட்டியில் அவுஸ்திரேலியா இரண்டுக்கு ஒன்று என்ற கோல் அடிப்படையில் வென்றுள்ளது.

எனினும் எதிர்வரும் நவம்பரில் நடைபெறும் ஓசனியா பிரிவுப் போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற வேண்டும். இப்போட்டி உலகின் ஐந்தாவது அணி ஒன்றை தேர்வு செய்வதற்கான போட்டியாகும்.

எவ்வாறேனும் சொலமன் தீவுகளுடனான போட்டியில் ஆகி கொம்சன், பிரேட் எமர்ட்டன் இருவருமே அவுஸ்திரேலியா சார்பில் கோல் அடித்து வெற்றிபெற வைத்தனர்.

# விளையாட்டுப் போட்டி நடாத்துவதற்கான அனுமதி கோரல் நிபந்தனைகள்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சபை விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான அனுமதி கோரல் நிபந்தனையை வெளியிட்டுள்ளது அவை வருமாறு:-

போட்டியின் போது ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் அமைப்பாளர்களே பொறுப்பேற்க வேண்டும்.

சுற்றுப் போட்டி நிபந்தனைகள் மிகவும் தெளிவாக எழுத்து மூலம் விண்ணப்பங்கள் செய்யும் போதே கழகங்களுக்கு வழங்க வேண்டும். போட்டிக்கான அனுமதி கோரும் போது இந்த நிபந்தனைகளை விளையாட்டு அபிவிருத்திச் சபையின் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

போட்டியின் போது முன்னறிவிக்கப்பட்ட நிபந்தனைகளிலிருந்து மாற்றங்கள் செய்யப்படக்கூடாது.

போட்டியில் நடுவர்களாக, தீர்ப்பாளர்களாக கடமையாற்றுவோர் தகுதிபெற்றவர்களுக்கான அத்தாட்சியுடையவரே நியமிக்கப்படல் வேண்டும் விபரங்கள் தரப்படல் வேண்டும்.

போட்டி நடாத்துவதற்கான மைதான வசதிகள் ஆட்ட விதிக்களுக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

சுற்றுப் போட்டி ஒன்றுக்கு 500.00 ரூபா சபைக்கு வழங்கப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டப்பட்டால் மட்டும் அனுமதி பரிசீலிக்கப்படும். அன்றேல் நிராகரிக்கப்படும் இதனைவிட பிரவேச கட்டணங்கள் அறவிடப்படும் போட்டிகளில் ரிக்கற் விற்பனையில் 25% சபைக்கு வழங்கப்படல் வேண்டும். ரிக்கற்றுக்கள் யாவும் சபையின் முத்திரை குத்தப்பட்டு விற்பனை செய்யப்படல் வேண்டும்.சுற்றுப் போட்டியின் சகல விடயங்களும் அந்த விளையாட்டுக்களின் விதிமுறைகளுக்கும், கழகத்தாலும் நிர்ணயிக்கப்படும் முன்னறிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப நடாத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பக்கடிதம் தலைவர், செயலாளர் என்போரால் ஒப்பமிடப்பட்டு சபையின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். நிகழ்ச்சிகள் உத்தேச தொடக்க நாளிலிருந்து குறைந்தது 30 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.போட்டிகள் எவையும் 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது.சுற்றுப் போட்டியில் ஏற்படும் பிரச்சினைகள் இட்ட தகவல்களையும் அவற்றுக்கு எடுக்கப்பட்ட நடைமுறைகளையும் போட்டி முடிவுற்ற இரண்டு நாட்களுக்குள் சபைக்கு எழுத்து மூலம்தெரிவிக்கவேண்டும்.சபையால் விசாரணைகள் எடுக்கப்பட வேண்டின் அதற்கான பிணைப்பணமாக ரூபா 1000.00 முற்பணமாக அறிக்கையுடன் வழங்கப்படவேண்டும். சபையின் விசாரணைக்கான செலவு போக மிகுதிப்பணம் இருப்பின் மீளச்செலுத்தப்படும்.வழங்கப்படும் பிரிவு விபரங்கள் முன் தெரிவிக்கப்படவேண்டும்.




# கால்பந்து பயிற்சி முகாம்

முழங்காவில் பிரதேச விளையாட்டுக்கழகங்களின் 45இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்ற காற்பந்து பயிற்சி முகாம் ஒன்று நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றது.

கிளி. மாவட்ட அரசாங்க அதிபரின் ஒழுங்குபடுத்தலில் முழங்காவில் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி பயிற்சிமுகாமை கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் கனகராசா நெறிப்படுத்தினார்.

# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

விசுவமடு தொட்டியடியில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நேற்று மாலை இரண்டு மணியளவில் ஆரம்பமானது. அ.ஆ.இ.ஈ என நான்கு பிரிவுகளாகவும் கைக்கொடிச் சவாரியும் இடம்பெற்றது. இச் சவாரியில் வன்னிமாவட்டத்திலுள்ள முன்னணிக்காளைகளும், யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிக் காளைகளும் பங்குகொண்டன. யாழ்.மாவட்டத்தில் இருந்து 15சோடிக்கு மேற்பட்ட முன்னணிக் காளைகள் பங்குபற்றி பரிசில்களையும் தட்டிச்சென்றுள்ளன. அடுத்த சவாரிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(12)



## சிந்தனைக்கு



உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும்,எமது தாயகமண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13.09.2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# ஏன் இந்த வேகம்?

கிளிநொச்சி உட்பட வன்னிப் பிரதேசத்தில் தெருக்கள் சில அண்மைக்காலத்தில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவை தற்காலிக புனரமைப்பு நடவடிக்கை என்ற மட்டத்திலேயே உள்ளன. இதன் பிரகாரம் வீதிகளில் உள்ள மேடு பள்ளங்கள் ஒப்புரவு செய்யப்பட்டு கிரவல் இடப்படுகின்றன. சில வீதிகள் கிரவல் இடப்பட்டு தார் ஊற்றுதல் என்ற ரீதியில் கறுப்பு நிறம் ஆக்கப்படுகின்றது.

இத்தனைக்கும் வீதிமுழுமைக்குமான புனரமைப்பு நடவடிக்கைகளாகவும் அவை இல்லை. சில கிலோ மீற்றர்கள் என்ற ரீதியிலேயே புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. ஏனையவற்றிற்கு நிதி ஒதுக்கீடின்மை, ஒப்பந்தக்காரர்கள் சீராக வேலையைச் செய்து முடிக்காமை காரணமாகின்றன. ஆனால் இங்கு நாம் குறிப்பிடவந்த விடயம் இப்புனரமைப்பு பணிகள் பற்றியதல்ல. சில சமயங்களில் இப்புனரமைப்புப் பணியை ஏன் செய்தார்கள் என மக்களை அங்கலாய்க்க வைக்கும் விடயம் பற்றியே ஆகும்.

அதாவது ஒரு சில கிலோ மீற்றர்கள் மட்டுமே செப்பனிடப்பட்டுள்ள இவ் ஊர்வீதிகளில் வாகனங்கள் செலுத்தப்படும் வேகமே மக்களின் இவ்அங்கலாய்ப்பிற்குக் காரணமாகும். அதாவது நெடுந்தூர வீதியால் வாகனங்கள் செலுத்தப்படும் வேகத்தை விஞ்சியதாக உள்ளூர் வீதிகளில் வாகனங்கள் செலுத்தப்படுகின்றன. ஒன்றையொன்று விரட்டிச் செல்கின்றன.

நீண்ட தூர பிரதான வீதிகளில் வாகனங்கள்அதிகமாக இருப்பினும் இடையூறுகள் குறைவாகவே இருப்பதுண்டு.ஏனெனில் பிரதான வீதியில் கடைப்பிடிக்கப்படும் வீதி ஒழுங்கு முறைகள; வீதி ஒழுங்குகள் பேணுவதில் கடைப்பிடிக்கப்படும் தீவிர கட்டுப்பாடு; மக்களுக்கும் பிரதான வீதியென்ற ரீதியில் பாதுகாப்பில் செலுத்தும் தீவிரகவனம் என்பன ஆகும்.

ஆனால் உள்ளூர் வீதிகளில் மக்கள் அத்தகைய கவனத்தைச் செலுத்துவது குறைவு என்பது மட்டுமல்ல, பிரதான நெடுஞ்சாலைகளைவிட உள்வீதிகளில் பாதசாரிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதும் உண்டு. அத்தோடு உள்ளூர் வீதியில் சிறுவர்கள் முதியவர்கள் தமது வளவிற்குள் நடமாடுவது போன்று வீதிகளைக் கடந்து செல்லும் வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால், செப்பனிடப்பட்ட உள்ளூர் வீதிகளில் வாகனத்தைச் செலுத்துபவர்களில் பெரும்பாலானோர் இவற்றைக் கருத்திற்கொள்வதாக இல்லை. சிலவேளைகளில் 80 கி.மீ, 100 கி. மீற்றர் வேகத்தில் கூட அவர்கள் வாகனத்தைச் செலுத்திச் செல்கின்றனர்.


நோயாளர் காவுவண்டிகள் (அம்பியூலன்ஸ்) அதிவேகமாகப் பயணிப்பதில் நியாயமுண்டு. யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தேவையின் நிமித்தம் வேகமாகப் பயணிப்பதிலும் நியாயமுண்டு. ஆனால் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலை எதுவும் அற்ற வேளையில் அதி கூடிய வேகம் ஏன்?

அதிகூடிய வேகத்தில் பயணிப்பதால் தனியாக விபத்தும்– அதனால் ஏற்படும் உயிர், உடமை இழப்புக்கள் மட்டும் தான் பாதிப்புக்கள் என கொண்டுவிடமுடியாது. கிரவல் வீதியால் அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்களால் கிளப்பப்படும் தூசுப் படலத்தால் வீதியில் செல்பவர்கள் உடல்கள், உடமைகள் என்பன மாசடைகின்றன. குறிப்பாகப் பாடசாலை மாணவ, மாணவிகளினதும், காரியாலயத்திற்குச் செல்வோரதும், தொலைதூரத்திற்குப் புறப்பட்டுச் செல்வோரினதும் உடைகள் பாதிப்பிற்கு உள்ளாவதன் மூலம் அவர்களைப் பெரும் பாதிப்பிற்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்குகின்றனர்.

இதனைத்தவிர வீதியால் அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்களினால் எழும் தூசி மண்டலம் வீதியோரத்தில் உள்ள தேநீர் சாலைகள், விற்பனை நிலையங்கள் என்பனவற்றிற்குள் புகுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேட்டிற்கும் வழிவகுப்பவையாக அமைந்து வருகின்றன. ஆனால் இவை எதனையும் வாகனங்களில் பயணிப்பவர்கள் கருத்திற்கொள்வதாக இல்லை.

இந்நிலையில் தான் மக்கள் வீதிகள் புனரமைப்பு இலகுவான பயணத்திற்கு வழி செய்துள்ளது என்பதற்கும் அப்பால் வீதிப் பயணம் ஆபத்து நிறைந்ததாகிவிட்டது என்ற எண்ணத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இதற்காகப் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட வேண்டும் என்பதல்ல அர்த்தம். இவ்வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் வேகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே அர்த்தமாகும்.

இக் கட்டுப்பாடு ஒரு புறத்தில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கை ஊடாகக் கொண்டு வரப்பட முடியும். ஆனால் அதற்கும் மேலானதாக மனதளவில் கொண்டு வரப்படுதலே வெற்றிகரமானதாக அமைய முடியும். அதாவது வாகனம் செலுத்துவோர் மக்கள் அனைவரையும் தமது பிள்ளைகளாக, சகோதரர்களாக, பெற்றோர்களாக கருதும் இடத்தில் வேகத்தை அவர்கள் தாமதமாகவே குறைத்துக் கொள்ள முடியும்.



# ஜாதிக ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம் செய்தால் கட்சி சார்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### – மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில் சந்திரிகா எச்சரிக்கை

பிரதமர் ராஜபக்ஷ ஹெலஉறுமய கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் கட்சி சார்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென சனாதிபதி சந்திரிகா எழுத்து மூலம் அவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜே.வி.பி யுடன் அவர் ஒப்பந்தம் செய்து கொண்டமை தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதம் மூலமாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "நீங்கள் ஜே.வி.பி யுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக கட்சித் தலைவரூடாக அறியவருகின்றது.

இதற்கான அழைப்புக் கடிதங்களும், தொலைபேசி அழைப்புக்களும் அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன. எனினும் எனக்கு எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை. அவ்வாறான தீர்மானம் எடுக்கும் பொறுப்பை பெற்றுள்ள மத்திய நிறைவேற்றுக் குழுவுக்கும் அறிவிக்கவில்லை. நான் சுனாமி பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றில் சமர்ப்பித்ததும் அமைச்சரவையினதும் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களினதும் மத்திய நிறைவேற்றுக் குழுவினதும் ஏகமனதான அனுமதியுடனேயே.

எனினும் இந்த உடன்படிக்கையை நீங்கள் தன்னிச்சையாக செய்துள்ளீர்கள். உங்கள் அனுமதியுடன் 2005 யூன் மாதம் செய்யப்பட்ட பொதுக்கட்டமைப்புப் பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என எவ்வாறு கூறமுடியும்? அன்று உடன்பட முடியாததை இன்று எவ்வாறு உடன்பட முடியும்?

இந்த ஒப்பந்தத்துக்கு எனக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தபோது அதன் காரணத்தை நான் புரிந்து கொள்ளவில்லையாயினும் அது ஒப்பந்தத்துக்கான அழைப்பாக இருந்தால் வேடிக்கையானது. பொதுஜன ஐக்கிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றின் உறுப்பினரான நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கை பாரதூரமானது. பிரபாகரனை சந்தித்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றி தெரிவித்துள்ளீர்கள். நாட்டைப் பிரிக்காமல் சமாதானத்தை ஏற்படுத்துவது எனில் அதிகாரப் பரவலாக்கலை வழங்க எமது கட்சி இணங்கியிருக்கின்றது. ஒரே ஆட்சி என்ற நோக்கோடு அதிகாரப் பரவலாக்கல் யோசனை பற்றி உங்களின் இவ்வுடன்படிக்கையில் தெரிவித்திருப்பது வேடிக்கையாகும்.

உங்களின் உடன்படிக்கையின்படி எப்படிச் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது எனக்கும் நாட்டுக்கும் தெளிவாகத் தெரியவில்லை. தீவிரவாதக் கொள்கையை உடைய ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிவிக்க வேண்டும். அதனுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டால் கட்சி கடும் நடவடிக்கை எடுக்கும்."

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று ஒப்பந்தம் செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மகிந்த ராஜபக்ஷ தம்மீதான குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்பு!

மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி யுடன் புதியதொரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் நாட்டை இன்னும் ஒரு யுத்தத்துக்கு கொண்டு செல்கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்; நாட்டிலுள்ள சிறார்களைப் பாதுகாக்கும் தந்தை தான் என்றும் அவர்களை மகிழ்ச்சியாக வாழவைக்க வேண்டும் என்றும் யாருடைய தாளத்துக்கும் ஏற்ப தான் ஆட வேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் மதிய போசனத்துக்காகவோ, தேநீர் விருந்துக்காகவோ தலைவர் பிரபாகரனை சந்திக்கவில்லை என்று கூறியதுடன், சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் சிங்கள சமூகம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருப்பதுடன் ஐ.தே.கட்சி நாட்டின் அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு நாடகமாட நினைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் பற்றி கடந்த வெள்ளியன்று சனாதிபதி அவர் மீது சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் சனாதிபதிக்குமிடையில் நேரடி பேச்சு ஒன்று நடைபெற வேண்டும் என்பது நாட்டுக்கு அவசியமாகிறது என்பதே தனது நிலைப்பாடு என்றும் தான் மதியபோசனத்துக்கோ தேநீர் விருந்துக்கோ அங்கு போகப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது; சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஒன்றிணைக்கும் ஒருவர் தான் மட்டுமே என்பதால் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தேர்தலில் தனக்கு ஆதரவாக வாக்களிப்பர் என்றார். அத்துடன் தான் வெற்றி பெற்றால் ஐ.தே.கட்சியையும் இணைத்துக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதாகவும் சிறிலங்காவிலுள்ள முஸ்லிம் மக்கள் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதாகவும் தான் அவர்களின் உரிமையை பெற்றுக் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் தனியரசுக் கோரிக்கைக்கு ஜே.வி.பி - ராஜபக்ஷ ஒப்பந்தம் வழிவகுக்கும்

### – ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில்

ஜே.வி..பி-மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அம்பாந்தோட்ட, திஸ்ஸமாராம ஆகிய இடங்களில் ஐ.தே.க வினரிடையே ரணில் பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜே.வி.பி-மகிந்த ஒப்பந்தமானது தமிழீழ விடுதலைப்புலிகளின் தனியரசுக் கோரிக்கையை மீளவும் எழுப்புவதற்கு உதவிசெய்யக்கூடும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆதரிக்கின்றார். ஆனால் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ அதை மாற்ற முயற்சி செய்கின்றார். ஆழிப்பேரலை மீளளிப்புக்கான பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றத்தில் ஆதரித்துப் பேசிய மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் துண்டுதலால் இப்போது எதிர்த்துப்பேசி இரட்டைநிலைப்பாட்டை மேற்கொண்டு வருகின்றார். இது நாட்டைமீண்டும் யுத்தப்பாதைக்கு அழைத்துச்செல்லும். ஆளும் பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் அமைதிமுயற்சிகள் அனைத்திற்கும் ஐ.தே.க.முழு ஆதரவளித்தது. சில் லறைத்தனமான அரசியல் இலாபங்களைபெற ஐ.தே.க. விரும்பவில்லை. நாட்டில் நிலையான அமைதிநிலவ வேண்டும் என்பதில் ஐ.தே.க.முழுமையான அக்கறை கொண்டுள்ளது.

ஐ.தே.க.ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மக்களின் வாழ்க்கைச் செலவீனத்தைக் கட்டுப்படுத்துவதுடன், இன்னமும் தற்காலிக முகாம்களில் வாழ்ந்துவரும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் ரணில் கூறினார்.

# நிரந்தர நியமனம் கோரி யாழ். இல் பட்டதாரி பயிலுனர்கள் ஆர்ப்பாட்டம்

வடக்கு கிழக்கில் உள்ள தூர அதிகஷ்ட பிரதேசங்களில் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களாக பணியாற்றி வரும் ஆசிரியர்கள் தமக்கு பணி மூப்பின் அடிப்படையில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கக் கோரி நேற்று யாழ். கல்வி வலயத்தினை முற்றுகையிட்டு மறியல் போராட்டத் தில் ஈடுபட்டனர், காலை ஏழு மணி முதல் மாலை 4.30 மணிவரை நடை பெற்ற முற்றுகை மறியல் போராட்டத் தில் 300இற்கு மேற்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். தமக்கு தீர்வு ஒன்று வரும் வரை தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ள தாகவும் இப்பட்ட தாரிகள் தெரிவிக் கின்றனர். இதனால் யாழ். கல்வி வலயத்தின் செயற்பாடு கள் பாதிப்புற்றன.

மேலும் இது தொடர்பில் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப் பட்டடுள்ளது. இது தொடர்பில்



செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது;

கடந்த ஒன்பது மாதகாலமாக பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் என அரச பாடசாலைகளில் கஷ்ர, அதி கஷ்ர பிரதேசங்களில் சேவை யாற்றிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படாது பட்டச் சான்றிதழ் பெறாதவர் களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர் பான விசாரணைகள் மேற்கொள்ள வுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் யாழ். அலுவலகப் பொறுப் ப திகாரி தெரிவித்துள்ளார். (கீ.28)

# முல்லை. தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்விற்கு வாகனத் தரிப்பிடங்கள் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நாளை நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வின் போது வருகைதரும் ஊர்திகள், உந்துருளிகள், ஈருருளிகள் என்பன பின்வரும் அட்டவணைக்கமைவாக தரிப்பிடங்களாக அமைக்கப்பட்டுள்ள தென முல்லை. மாவட்ட தமிழ் தேசிய எழுச்சி செயலணி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மல்லாவி, பாண்டியன்குளம், மாங்குளம், விசுவமடு, உடையார் கட்டு, தேவிபுரம் ஆகிய பகுதிகளி லிருந்து வருகை தரும் ஊர்திகள், உந்துருளிகள், ஈருருளிகள் புதுக் குடியிருப்பு பொதுவிளையாட்டு மைதானம் பரந்தன், வீதி உள்ளூ ராட்சி மைதானத்திலும் அதே போன்று ஒட்டுசுட்டான், தண்டுவான், மல்லாவி, பாண்டியன்குளம், மாங்குளம் பகுதிகளில் இருந்து வருகை தரும் ஊர்திகள் யாவும் புதுக்குடியிருப்பு ஐயன்கோவில் மைதானத்திலும், முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியிலிருந்து வரும் ஊர்திகள் மட்டும் புதுக்குடியி ருப்பு றோ.க பாடசாலை மைதானத் திலும், பொக்கணை, இரணைப் பாலை, மாத்தளன், வலைஞ்ஞன் மடம் பகுதிகளிலிருந்து வருகை தரும் ஊர்திகள் மட்டும் புதுக் குடியிருப்பு உதயசூரியன் கலாமன்ற மைதானத்திலும், முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியிலிருந்து வரும் உந்துருளிகள், ஈருருளிகள் மட்டும் புதுக்குடியிருப்பு கொக்குளாய் பாடசாலை மைதானத்திலும், மாத்தளன், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலிருந்து வரும் உந்து ருளிகள், ஈருருளிகள் மட்டும் புதுக் குடியிருப்பு சுப்பிரமணியம் வித்தியா சாலை மைதானத்திலும் தரிப்பிட வசதிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளது. (சோ)

# வவு.பொதுஅமைப்புக்கள்–புலிகள் புளியங்குளத்தில் சந்திப்பு

வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் பொது அமைப்பு களின் பிரதி நிதிகளுக்கும் இடையில் புளியங்குளத்தில் நேற்று சந்திப் பொன்று நடைபெற்றுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்ற இச்சந்திப்பில் தேசிய எழுச்சிப் பேரவை,மாதர்சங்கங்கள், கிராமஅபிவி ருத்திச் சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ள னர்.

சமகாலத்தில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் இடம்பெற்று வரும் சம்பவங்கள், போராளிகளுக்கு விடுக் கப்பட்ட அச்சுறுத்தல்கள், அரசியல் காரியாலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக தாம் இராணுவ கட்டுபாட்டு பகுதியில் தொடர்ந்து பணிபுரிய முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் இலங்கை அரசாங்கமானது போர் நிறுத்த உடன்படிக்கை என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையை எடுத்து வருவதா கவும் எனவே இதற்கு எதிராக தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராடவேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது. (21)

## ஐக்கிய...

இலங்கைத் தீவில் இரத்தத் தெறிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதிப் பேச்சுக்களை நடாத்துவதில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகிற நோர்வே அனுசரணையாளர்கள் மீதான சிங்களப் பேரினவாத்தின் விமர்சனங் களைப் பதிவு செய்திருக்கும் கார்டியன் சிங்களவர்கள் தேச இறையாண்மை என்கிற பெயரில் அம்மக்களை தவறாக வழி நடாத்துவதாகவும் கூறியுள்ளது.

அதிகாரத்தைப் பற்றிக் கொண்டு எந்தவித சமரசமான போக்குக்கும் இணங்கிவராமல் இருப்பதில் இலங்கையின் பெரும்பான்மை சமூகம் தீவிரம் காட்டி வரும் நிலையில் சர்வதேச சமூகம் இதை அவதானிக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணுங்கள் என்ற சர்வதேச சமூகத்தின் பார்வை யில் மாற்றம் அவசியம் தேவை என்றும் கார்டியன் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவு. சன் ரி.வி மீள் ஒளிபரப்பு நிலையம் மீது நேற்றிரவு தாக்குதல்

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியிலுள்ள சன் ரி.வி மீள் ஒளிபரப்பு நிலையம் மீது நேற்றிரவு 9.15 மணியளவில் இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகமும் கைக்குண்டு வீச்சும் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதன்போது காரியாலயத்திற்கு சேதம் ஏற்பட்டபோதும் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர். இவ் அலுவல கம் மீது முன்னர் இடம்பெற்ற கைக்குண்டுவீச்சில் ஒளிபரப்பு உபகரணங் கள் சேதமடைந்தமை தெரிந்ததே.

இந்தத்தாக்குதலையடுத்து காமினி இராணுவமுகாம், குருமன்காட்டுச்சந்தி ஆகிய இடங்களிலுள்ள இராணுவத்தினர் வீதியால் சென்றோர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இரவு 10.15மணியளவில் தாக்குதல் குறித்துப்பொலிசாரும், போர்நிறுத் தக்கண்காணிப்புக்குழுவினரும் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினர் . (21)

# க.பொ.த (உ/த) பரீட்சையில் முல்லைத்தீவு ம.வி பெறுபேறுகள்

க.பொ.த.(உ.த) பரீட்சை ஏப்ரல் 2005இல் முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன கலைப்பிரிவில் கீ.பீட்நியாகரன் 2-ஏ-பி,எ.வினோத் ஏ-பி-சி,கோ.மங்களேஸ்வரி ஏ- 2சி, டே. யூ டெக்சியா ஏ-பி-சி, ஜெ.அன்ரனிசிங் ஏ-2சி,வர்த்தகப்பிரிவில் வி.சத்தியேந்திரா 2பி-சி, இ.தர்மசீலன் 3-சி, யே.மேரிஆன்லக்சிகா 3-சி, விஞ்ஞானப்பிரிவில் அ.யோசேப் 3-எஸ், ம.ஜெரோம் 3-எஸ். (20)

## பாதுகாப்பிற்கு..

விக்கு பதிலளிக்கும் போது அவர்மேலும் தெரிவித்ததாவது;

நாங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள எமது தாயகப்பகுதிகளில் அரசியல் பணிக்காக சென்றிருந் தோம்.

ஆனால் அங்கு இராணுவத் தினராலும் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தேசவிரோ தக்குழுக்களாலும் காலப்போக்கில் எமது பணிகளுக்கு பெரும் இடையூறு விளைவிக்கப்பட்டு வந்தது.

ஆனால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தக் குழுக்கள் எமது தாயகப்பகுதிக்குள் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என்றும் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் அதனை அனுசரணை யாளர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் யுத்தநிறுத்த காலகட்டத் தில் மேற்படி இராணுவ துணைக் குழுக்கள் வெளியேறாத அதேநேரத் தில் அந்தக் குழுக்கள் மேலும் அரச பாதுகாப்பு படையினருடைய பலத்த பாதுகாப்புடன் அவர்களுடைய செயற்பாடுகள் விரிவாக்கப்பெற் றுள்ளது. இங்கே இந்த உடன்படிக் கையில் பெரியதொரு மீறல் நடத்திருக்கிறது இதன் அடிப்படை யில் எமது தாயகப்பகுதியில் குறிப்பாக வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் எமது அரசியல் பணிப் போராளிகளும், பொறுப்பாளர்களும், தளபதிகளும் கொல்லப்பட்டிருக் கின்றனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாம் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் இதுபற்றி முறைப்பாடு செய்திருக் கின்றோம். அவர்களால் கூட எந்த ஒரு கொலைகளுக்கும் நடவடிக்கை எடுக்கவுமில்லை. அடுத்த கட்டத்தில் அவற்றை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தீவிரம் பெற்ற ஒரு சூழ்நிலையில்தான் இருக்கின்றது.

அண்மைக்காலமாக எமது தலைமைப்பீடமும், எமது அரசியல் துறைப்பொறுப்பாளரும் கண் காணிப்புக்குழுவிற்கு ஒவ்வொரு சம்பவங்கள் நடந்த போதும் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தார்கள். இக் கொலைகளுக்கு உரிய நடவடிக்கை எடுத்து இனிமேலும் தொடராமல் இருக்கும் படியும் கோரிக்கைகளை முன்வைத்தார்கள் அதற்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நடவடிக்கை தீவிரம் அடைந்து வந்த நிலையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் எமது அரசியல் போராளி களுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அச்சுறுத்தல் என்ற ஒரு முழுமை யான கட்டத்தை அடைந்த நிலை யில் எமது தேசியத்தலைவரின் அழைப்பின் பேரில் அப்பகுதிகளில் இருந்து எமது முழுமையான பணி கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அழைக் கப்பட்டிருக்கின்றார்கள். ஆயினும் அங்குள்ள எமது மக்களின் பங்களிப்பு மூலம் எமது மக்களு டைய சமூக பொருளாதார சேவை களையும், ஒத்துழைப்புக்களையும் நாங்கள் எமது மக்களுக்கு செய்து கொண்டே இருப்போம்.

இதேநேரத்தில் அரச கட்டுப்பாட்டு பகுதிக்குள் வைத்து கண்காணிப்பு குழுவுடனான சந்திப்புகள் எதுவும் நடைபெற மாட்டது.

மக்கள் தமது தேவைகளை பொறுத்து எங்களுடன் தொடர் புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். அதற்காகத்தான் முகமாலை சோதனைச் சாவடிக்கு அருகில் பணிமனை ஒன்றை நாங்கள் திறக்க வுள்ளோம் அங்கு வந்து மக்கள் தமது தேவைகளை, பிரச்சினை களை தீர்த்துக் கொள்ளமுடியும் என்றார். (கு)

## சிங்கள...

**சிங்கள...**கும். இதில் மகிந்த தேசிய வாதத்தினையும், ரணில் மேற்குலக வாதத்தினையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். இதில் எமது நாட்டுக்கு நன்மையான தேசிய வாதத்தினை மக்கள் ஆதரிக்க வேண்டும். மகிந்தவை வெற்றி பெறச்செய்ய வேண்டும்.

நாம் யுத்த விரோதிகளும் அல்ல, யுத்த வாதிகளும் அல்ல. அதே நேரம் யுத்தம் தேவை என்றால் யுத்தம் செய்யத் தயாராகவும் உள்ளோம். நாம் யுத்தத்திற்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. ஒன்றுபட்ட இலங்கை என்பதற்காக 20 வருடங்களாக நாம் போராடினோம். இதற்கு இன்று வெற்றி கிடைத்துள்ளது.

நாட்டில் தற்போது இருப்பது சிங்கள இனவாதம் இல்லை. தமிழர்களது இனவாதமே தலை தூக்கியுள்ளது. அதற்கு தமிழர் கூட்டமைப்புடன் சேர்ந்து துணைபோகின்றார் ரணில்.கொழும்பில் குண்டுகள் வெடிக்காதது மட்டும் சமாதானமல்ல. கொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இது யுத்தநிறுத்த உடன்படிக்கையல்ல. எல்லாம் ரணில் தோற்றுவித்த ஒரு மாயை. சிலர் சொல்வது போல் மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை உதறித்தள்ளவில்லை. மாறாக சந்திரிகாவின் சர்வாதிகார பிடியில் இருந்து அக்கட்சியை பாதுகாத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

## பொதுக்...

இதன்போது தமது வாதத்தை முன்வைத்த பிரதிவாதியான புனர்வாழ்வுத்துறை அமைச்சின் செயலர் எம் எஸ் ஜெயசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்ற தடைஉத்தரவால் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்த முடியவில்லை எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமந்தியர சர் நீதிமன்றம் விதித்த திருத்தங் களுக்கு அமைய பொதுகட்ட மைப்பை முன்னெடுத்துச்செல்வதில் தடையில்லை எனக் குறிப்பிட் டார்.இதனை ஏற்றுக்கொள்ளாத சட்டத்தரணி நீதிமன்ற தடைகாரண மாக வெளிநாடுகளில் இருந்து நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பானது அரசியலமைப்பிற்கு முற்றிலும் முரணானது என்றும் அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் கூறிவரும் ஜே.வி.பி உறுப்பினர்கள் அது தொடர்பான விடயங்களை தங்களின் வழங்கறிஞர்களினூடாக கடந்தவாரம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர். அரசாங்கத்தின் சார்பில் புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரும், பொதுக்கட்டமைப்பு விடயங்களை எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தார். பொதுக்கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங் களை எவ்வித மாற்றங்களுக்கும் உடபடுத்தாது அவ்வாறே வைக்கு மாறும் ஜே.வி.பியினர் முன்வைத் திருக்கும் கோரிக்கைகளை தள்ளுபடி செய்யுமாறும் உடன் படிக் கையின் எந்தவொரு அத்தியாயமும் அடிப்படை உரிமைகளை மீறவில் லை என்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எழுத்து மூலமான தனது பதிலில் தெரிவித் துள்ளார். (32)

## ஈழநாதம்..

பொலிசாரினால் விசாரிக்கப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர்விடுதலை செய்யப்பட்டிருக் கின்றபோதும் ஏனைய மூன்று பேரும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

## இளைஞர்...

ரையாடி வருகின்றனர்.

அத்துடன் சம்மந்தப்பட்ட இளை ஞர்களின் பெற்றோர், கிராமமுக் கியஸ்தர்களுக்கு இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறா வண்ணம் ஆலோசனைகள் வழங்கப்பபட்டன.

## புலிகளால்...

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது மூன்று பொலிஸ் உத்தியோகத்தர் களையும் விசாரணை மேற் கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு மாவட்ட நீதியாளர் சாதனா அவர்கள் உத்தரவு வழங்கினார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் பந்து வீரசிங்க பொவிற்றகொட (வயது 35), பொலிஸ் கான்ஸ்டபிள்களான களுத்துறையைச் சேர்ந்த கமகே திலீப்கேமந்த (வயது 30), குளியா பிட்டியாவைச் சேர்ந்த அத்துக் கொரளகே டோன்சரத் (வயது 39) ஆகிய மூவரையுமே 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதியாளர் உத்தரவு வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.